Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 28 திங்கட்கிழமை (11.05.2015) | பக்கங்கள் 20 | ஓசை - 223

# வரும் பொதுத் தேர்தலிலும் தமிழரின் தீர்மானத்தை அவதானிக்கிறதாம் சர்வதேசம்



## தேர்தலுக்கு தயாராகிறார் சம்பந்தன்

(மட்டக்களப்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளனர் என்பதனை சர்வதேச சமூகம் அவதானித்துக் கொண்டிருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - வந்தாறுமூலை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சாத்வீகப் போராட்டம், அரசியல் போராட்டம், ஜனநாயகப் போராட்டம், ஆயுதப் போராட்டம், இராஜதந்திரப் போராட்டம் ஆகியன தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி மேற்கொள்ளப்பட்ட நிலையில், தற்போது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய காலம் வந்துள்ளதென அவர் கூறியுள்ளார்.

மனித உரிமைச் சட்டங்களையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் மீறியமை, யுத்த நியமங்களை மீறியமையினால் சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## கிளி.வன்னேரிக்குளத்தில் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

வன்னேரிக்குளம் சோலை கிராமத்தைச் சேர்ந்த நடராசா பரமேஸ்வரன் என்பவரே வெடிக்கொலை செய்யப்பட்டு காட்டுக்குள் புதைக்கப்பட்ட நிலையில் நேற்று சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த நான்கு நாட்களாக நடராசா பரமேஸ்வரனைக் காணவில்லை என உறவினர்கள், ஊரவர்கள் தேடிய போதும் அவரைப் காணாத நிலையில் சந்தேகத்தின் பேரில் பரமேஸ்வரனுடன் முரண்பாடுகளுடன் காணப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த துரைசிங்கம் விமலாகரன் என்பவரை ஊரவர்கள் பிடித்து விசாரித்த போது தானும் செல்வராசா சதானந்தராஜா என்பவரும் சேர்ந்து பரமேஸ்வரனை வெட்டிக் கொலை செய்து புதைத்துள்ளதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் பழிவாங்கல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படுகின்றமை, அரசியல் பழிவாங்கல் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போகம்பர சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மத்திய மாகாண சபையின் அவைத் தலைவர் மகிந்த அபேகோனை நேற்றையதினம் சந்தித்த பின்னர் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக பலர் புதிய அரசாங்கத்தினால் பழிவாங்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி மன்றங்களின் கால எல்லையை நீடிக்குக

### ஐ.ம.சு.மு. கோரிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படும் கால எல்லையை நீடிக்கும் விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்ல ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

234 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லை எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரி – மகிந்த சந்திப்பு சு.க.வின் உள்வீட்டுப் பிரச்சினை

### என்கிறார் நீதி அமைச்சர்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் நடைபெற்ற சந்திப்பினால், ஐக்கிய தேசியக்

19 ஆம் பக்கம் பார்க்க

## திவிநெகும திணைக்களத்தின் முக்கிய ஆவணங்கள் மாயம்

(கொழும்பு)

திவிநெகும திணைக்களத்தின் ஐந்து முக்கிய ஆவணங்கள் மாயமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமூகப் பாதுகாப்பு பிரிவின் நிதியம் தொடர்பான ஆவணங்களே, இவ்வாறு காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காணாமற் போன ஆவணங்களில், கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குறித்த குற்றச்சாட்டுகளுடன் சம்பந்தப்பட்டவர்களே இந்த ஆவணங்களை திருடியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில், அதற்கு பொறுப்பாகவிருந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 20 ஆவது திருத்தச் சட்டம் இம்மாதம் நாடாளுமன்றில்?

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 20 ஆவது திருத்தச் சட்டம் இம் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி அமைச்சரவையில் எதிர்வரும் 13 ஆம் திகதியும் நாடாளுமன்றத்தில் இம் மாதம் 19 ஆம் திகதியும் குறித்த திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தேர்தல் முறை மாற்றங்களை உள்ளடக்கிய 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 20

19 ஆம் பக்கம் பார்க்க

## நல்லாட்சிக்கு அச்சுறுத்தல் சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)



தற்போதைய நல்லாட்சியை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் நல்லாட்சிக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதிய

19 ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

(கொடிகாமம்)

யாழ்ப்பாணம் கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

வீட்டுக்கு மின் இணைப்பு வழங்கிப் பார்த்தபோது மின்சாரம் தாக்கியதில் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அல்லாரை

19 ஆம் பக்கம் பார்க்க

# வருடாந்த மஹோற்சவம்

பிரசித்தி பெற்ற சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந்த ஆலய மஹோற்சவத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை வேட்டைக் காட்சியும், 14 ஆம் திகதி மாலை சகோபுரக் காட்சியும் (சப்பறத் திருவிழா), 15 ஆம் திகதி மாலை கிருஷ்ணகந்தோற்சவக் காட்சியும், 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திரு உலாக் காட்சியும்,மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை வேளையில் கொடியிறக்கமும் இடம்பெறும். 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை சங்காபிஷேகமும் நடைபெறும்.

மஹோற்சவ காலங்களில் காலை உற்சவம் தினசரி காலை 7 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் பூசைகள் முற்பகல் 11 மணிக்கு நிறைவு பெறும்.

மாலை உற்சவம் பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.30 மணிக்கு நிறைவுபெறும். மஹோற்சவ காலத்தில் தினசரி காலை உற்சவத்தின் போது அன்னதானம் வழங்கப்படும்.

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

வரணி வடக்கு கறுக்காய் கந்தசுவாமி ஆலய பாவனைக்கென அடியார் ஒருவர் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கி சாதனங்களை கடந்த சித்திரைப் பௌர்ணமி தினத்தன்று அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவ் ஒலிபெருக்கி சாதனம் வழங்கப்பட்டதால் விசேட தினங்களில் உதவியாக இருக்குமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (150)

# வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் “அதிபர்கள் சங்கமம் 2015” கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் "அதிபர்கள் சங்கமம் 2015" கலந்துரையாடல் யாழ்ப்பாணம் ரில்க்கோ விருந்தினர் விடுதியில் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் க.சிவநேஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், வடமாகாண பாடசாலைகளில் கல்வியில் நடைமுறை ரீதியில் காணப்படும் குறைபாடுகள், தேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதிபர்களுடைய கௌரவத்துக்குரிய மதிப்புக்கள் வழங்கப்படவேண்டும், அதிபர் பதவி வெற்றிடங்கள் ஏற்படும் போது ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு உரிய காலத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும்,

அதிபர் இடமாற்றம் இடம்பெறும் போது உரியமுறையில் ஏற்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும், பாடசாலைகளின் தரங்களை அடிப்படையாகக் கொண்டு அதிபர் பதவிக்குரிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆசிரிய இடமாற்றத்தின் போது உரியமுறையில் இடமாற்ற நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டு வருட இறுதியில் பட்டியல் தயார்படுத்தப்பட்டு வருட ஆரம்பத்தில் இடமாற்றங்கள் வழங்கப்படவேண்டும்,

செயலமர்வுகளில் பங்குபற்றுபவர்களுக்கு கையேடுகள் வழங்கப்பட வேண்டும் செயலமர்வுகள் பொருத்தமான வகையில் பொருத்தமான காலப்பகுதியில் இடம்பெற வேண்டும். விளையாட்டுப் போட்டிகளுக்கான நடுவர்களின் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளமையால், பாடசாலை அதிபர்கள் நிதிப் பற்றாக்குறைக்கு உள்ளாகின்றார்கள் இதற்கான நிதியினை பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலைகளுக்கிடையிலான வளப்பங்கீடு பாடசாலையின் தேவை, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருத்தமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலை நிதி முகாமைத்துவத்தை கையாள்வதற்கு பாடசாலைகளுக்கு முகாமைத்துவ நிதி உதவியாளர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும்.

மாணவர்களின் பரம்பலுக்கு ஏற்ப பாடசாலைகளின் தரங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர் எண்ணிக்கைகள் வரையறுக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் பொருத்தமான பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

க.பொ.த.உயர்தர வகுப்புகள காலம் தாழ்த்தி ஆரம்பிக்கப்படுவதால் மாணவர்கள் ஒழுக்கப் பிறழ்வான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும்,

மாணவர்கள் அதிகளவு நேரம் தனியார் கல்வி நிலையங்களில் நேரத்தை செலவிடுவதனால் ஒழுக்கப் பிறழ்வு ஏற்படுகின்றது. அதற்குரிய மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும், மாணவர் ஒழுக்கம் சார்ந்து பொதுவான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.இக்கோரிக்கைகள் ஆவணமாக தயாரிக்கப்பட்டு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் அதிபர்கள் சங்கமம் நூல் வெளியீடு செய்யப்பட்டது. நூலை வடமாகாண அதிபர் சங்கத்தலைவர் எஸ்.சிவநேஸ்வரன் வெளியிட்டு வைக்க வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா பெற்றுக்கொண்டார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திராஜா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ண குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செ.அன்ரன் சோமராஜா, மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம். ஷியான், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜஸ்ரீட்ஸ் மாலினி வெனிற்றன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஜ.குருஸ், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்ஸ்குயின்ரஸ், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.சிறிஸ் கந்தராஜா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தெல்லிப்பளை சி.க.கூ.சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிறந்த சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றான தெல்லிப்பளை துர்க்காபுரம் மத்திய சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம், நேற்று துர்க்காபுரம் தேவஸ்தான இல்லத்தில் சங்கத் தலைவர் ச.ஆறுமுகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் க.கணேஸ், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தலைவர் ஆறுமுகநாதன் உரையாற்றுகையில், சங்கம் கடந்த 23 வருடங்களாக நல்ல முறையில் இயங்கி வருகின்றது. மாணவர்களை நல்ல முறையில் உருவாக்கும் வகையில் அவர்களுக்கான சேமிப்புத் திட்டத்தை முன்னெடுத்துள்ளதுடன், பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெறுபவர்களுக்கு புலமைப் பரிசில் திட்டத்தையும் செயற்படுத்தி வருகின்றது.

இளைய தலைமுறையினரின் ஆற்றலை நல்ல முறையில் வெளிக்கொண்டு வரும் வகையில் கலாசார நிகழ்வுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வருகின்றது.

அங்கத்தவர்களின் ஆற்றலை வெளிப்படுத்த விளையாட்டுப் போட்டிகள், வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கடன்களையும் வழங்கி வருகின்றது. அங்கத்தவர்கள் பூரணமாக ஒத்துழைப்பதன் மூலம் சங்கம் நல்ல நிலையில் தொடர்ந்தும் செயற்படக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு காலையடி ஞானவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த் தோற்சவமும் நடைபெறும். (10)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கட்கிழமை |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |



மானிப்பாயில் நடைபெற்ற ஈ.பி.டி.பியின் மே தின நிகழ்வில் “எண்ணி துணிவோம்” சிந்துநடைக் கூத்தினை வழங்கிய கைதடி மேற்கு சனசமூக நிலைய மகளிர் அணியினரைக் காணலாம். (54)

# தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வோரைக் கட்டுப்படுத்த வேண்டும்

## மீனவர்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வதை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு தடைசெய்ய்ப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வதனால் நந்திக் கடலில் தொழில் செய்யும் மீனவர்கள் பொருளாதார ரீதியில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் மீனவர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

நந்திக்கடலில் சட்டவிரோத மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் கடற்றொழில் திணைக்களம், பொலிஸார், மீனவ சங்கங்களின் உதவியுடன பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் தொடர்ச்சியாக தடைசெய்யப்பட்ட வலைகளைப்பயன் படுத்தி வருவதாகவும் மீனவர்கள் அமைச்சரிடம் குறிப்பிட்டனர்.

அத்துடன், தமது பிரச்சினைகள் கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜரொன்றையும் குறித்த மீனவர்கள் அமைச்சரிடம் கையளித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மீனவர்கள் முன்வைத்த பிரச்சினை தொடர்பில் உரிய அவதானம் செலுத்துவதுடன், இதுதொடர்பில் கடற்றொழில் அமைச்சருடன் நேரடியாக பேசுவதாகவும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு நீராவிப்பிட்டி மீனவர் சங்கத்தினருக்கும் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும் இடையில் விஷேட சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

முல்லைத்தீவுக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் செய்த அமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடிய நீராவிப்பிட்டி மீனவர் சங்க பிரதிநிதிகள் தாம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். (165)

# ஆயுர்வேத வைத்தியசாலையின் சேவையை மேலுமொருநாள் அதிகரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுதேச ஆயுர்வேத பணிப்பாளரின் அனுமதியுடன் இயங்கும் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் இரு நாட்கள் நடைபெறும் சேவையை மூன்று நாட்களாக அதிகரிக்குமாறு மக்கள கோரிக்கைவிடுத்துள்ளனர்.

மேற்படி வாரத்தில் இரு நாட்கள் நடைபெறும் சேவையில் மாதாந்தம் 280 இற்கும் மேற்பட்டோர் பயனுள்ள வைத்திய சேவைகளை பெறுகின்றனர்.

வாரத்தில் இரு வைத்திய நிபுணர்களின் சேவை திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் முழுமையாக இடம்பெறுகின்றது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வகையில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவில் உள்ள சிறுவர்கள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் மற்றும் தேவையுடைய பொதுமக்கள் முழுமையாக பயன்பெறுகின்றனர்.

மேற்படி நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் இயங்கும் இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பெருமளவிலான மக்கள் பயனுறு சேவையை பெறுவதால் மேலும் ஒரு நாளை அதிகரித்து வாரத்தில் மூன்றுநாட்கள் சேவை இடம்பெற மாகாண சுகாதார சுதேச ஆயுர்வேத பணிப்பாளர் முன்வர வேண்டும் என நவாலியில் உள்ள ஏனைய பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

# சனசமூக நிலையத்துக்கு அன்பளிப்பு

(புலோலி)

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் சனசமூக நிலையத்தின் நலன் கருதி 15 ஆயிரம் ரூபா பெறுமதியான அலுமாரி, மற்றும் மூவாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான அதிக வலுவுள்ள மின் குமிழ் போன்றவற்றை நலன் விரும்பி ஒருவர் அன்பளிப்புச் செய்துள்ளார்.

புலோலி கிழக்கு சந்தாதோட்டத்தைச் சேர்ந்தவரும், தற்போது கனடா நாட்டில் தொழில் புரிபவருமான தங்கவேலு விஜயதாஸன் என்பவரே இவற்றை நிலைய நிர்வாகிகளிடம் கடந்த வாரம் கையளித்துள்ளார்.

கடல் கடந்து வாழுகின்ற போதிலும் எமது மண்ணையும், கிராமத்தையும் நினைவு கூர்ந்து சனசமூக நிலையத்திற்கு வழங்கிய இந்த அன்பளிப்பானது புலம் பெயர்ந்து வதியும் எமது கிராமத்து உறவுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்று சந்தா தோட்டம் சனசமூக நிலையச் செயலாளர் இ.கிருபாகரசூரியன், பாராட்டுக் கடிதம் ஒன்றையும் அவருக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (166)

# மூன்று பேருக்கு வாழ்வாதார உதவி



இறுதிப்போரில் பறிகொடுத்த உறவுகளின் நினைவாக மூன்று பேருக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடாக வழங்கப்பட்டிருந்த குறித்த வாழவாதார உதவியில் தலா 325 வாழைக்கன்றுகள் இரு பெண் தலைமைத்துவக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதோடு முச்சில்லுவண்டியில் பயணித்து வியாபாரம் செய்யும் ஒருவருக்கும் சிறிய வாழ்வாதார ஊக்குவிப்பு உதவி வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இறுதிப் போரில் பறிகொடுத்த முல்லை.கள்ளப்பாடு கிராமத்தைச்சேர்ந்த தனது கணவர் இராசரத்தினம் இரட்ணசிங்கம், தனது மகள் இரட்ணசிங்கம் வினிதா, உடுத்துறையைச் சேர்ந்த தனது சகோதரியான மரியரெட்ணம் விஜயலட்சுமி மற்றும் அவரது மகன் மரிய ரெட்ணம் நிரோஜன் ஆகியோரின நினைவாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 10 ஆம் திகதியில் தன்னால் இயன்ற உதவிகளை புலம் பெயர்ந்து வாழும் ஓர் ஈழத்து கைம்பெண் வழங்கிவருகிறார்.

அந்தவகையில் இவ்வருடமும் அவ்வாறு வாழ்வாதார சவால்களை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியானது வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடாக வழங்கப்பட்டிருந்தது.

புதுக்குடியிருப்பு விசுவமடு பகுதியைச்சேர்ந்த இரு பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தலா 325 வாழைக்கன்றுகள் வழங்கப்பட்டதோடு இடுப்புக்கு கீழ் இயங்காத நிலையிலும் முச்சில்லு வண்டியில் நாளாந்தம் பயணித்து சிறுவியாபார முயற்சியை முன்னெடுக்கும் முல்லை.சிலாவத்தை பகுதியைச்சேர்ந்த ஒருவருக்கும் சிறு ஊக்குவிப்பும் வழங்கப்பட்டிருந்தது. (160)

# பேருந்துகளுக்கிடையே போட்டி ஆபத்துக்களை எதிர்நோக்கும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதிச் சேவையில் ஈடுபடும் தனியார் மற்றும் அரச பேருந்துகள் குறித்த வீதிச் சேவையில் ஈடுபடும் போது ஏற்படும் தொடர் போட்டியினால் பயணிகள், பாதசாரிகள் தொடர்ந்தும் பாதிகப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.நகரில் இருந்து குறித்த மானிப்பாய் வீதியூடாக பல்வேறு இடங்களுக்கான அரச, தனியார் பேருந்துகள் சேவையில ஈடுபடுகின்றன. காரைநகர், மாதகல், இளவாலை, கீரிமலை, தெல்லிப்பழை, நவாலியூடான கரைநகர் போன்ற இடங்களுக்கு 782, 787, 788, 740 போன்ற வழி இலக்கச் சேவையில் ஈடுபடும் அரச, தனியார் பேருந்துகள் ஒன்றின் பின் ஒன்றாக போட்டி போட்டுக்கொண்டு செல்வதும் ஒன்றை ஒன்று முந்திச்செல்லுதல் தினமும் குறித்த வீதியில் நடைபெறுகிறது. இதனால் இவ் வீதியால் பயணம் செய்வோர் பல்வேறு அவல நிலைகளை சந்திக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக பேருந்துக்காக காத்திருப்பவர்களை போட்டி போட்டிக் கொண்டு வரும் பேருந்துகள் சிலவேளைகளில் ஏற்றாமல் செல்வதாகவும் இதனால் பயணிகள் உரிய நேரத்துக்குச் செல்ல வேண்டிய இடதுக்கு செல்ல முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவ்வாறான போட்டி வேகம் காரணமாக விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொதுமக்களின் நலனில் அக்கறை செலுத்தி பேருந்துகளின் வேகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)


# சட்டவிரோத மதுபான விற்பனை 15 நபர்கள் கைது

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட 15 பேர் மது வரித்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 30 ஆம் திகதி தொடக்கம் வெசாக் தினம் வரையான காலப்பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டவர்கள் மது வரித் திணைக்களம் நடாத்திய பல்வேறு சுற்றிவளைப்பிலேயே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மதுவரித் திணைக்கள அதிகாரி தா.அசோகரத்தினம் தெரிவித்துள்ளார்.

மேற்படி கைது செய்யப்பட்ட நபர்கள் புலோலி, தும்பளை, அல்வாய், குடத்தனை பகுதிகளில் வைத்து மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த போதே கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (18)





முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடலுணவு ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் விசேட அழைப்பின் பேரில் மீனவர்களை கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் சந்தித்து உரையாடினார் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ் வரன், அந்தவேளையில் எதிர்நோக்கும் பிரச்சினை கள தொடர்பிலும் கலந் துரையாடியதுடன் அங்குள்ள பனிக்கட்டி உற்பத்தி நிலையத்தையும் பார்வையிட்டார். (160)

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அன்பைத் தவிர வேறு அறியாத...

குழந்தைகளுக்கு உலகில் இரண்டே இரண்டு பிரச்சினைகள்தான் இருக்கிறது என்பார்கள். ஒன்று அம்மா. மற்றது அப்பா. நேற்றைய தினம் அம்மாவுக்குரிய நாள்.

மே மாதத்தில் வரும் இரண்டாவது ஞாயிறு, அன்னையர் தினம் - Mother's day, உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாததால் தாயைப் படைத்தார் என்று ஒரு யூதப் பழமொழி கூறுகிறது. தாயிற் சிறந்த கோவிலுமில்லை என்னும் தமிழ்ப் பழமொழியும் இதே கருத்தில் அமைந்தது தான்.

வருடம் தோறும் வரும் சித்திரைப் பூரணையில் இறந்து போன தாயை விரதமிருந்து நினைவு கூரும் வழக்கம் தமிழ் இந்துக்களிடம் உள்ளது. உலகளாவிய அன்னையர் தினம் கொண்டாடப்படுதல் ஆரம்பமானது அமெரிக்காவில்.

1908-இல் அமெரிக்காவைச் சேர்ந்த அன்னா என்பவர், தனது தாயாரான ரீஸ் ஜார்விஸ் நினைவாக "தாயர் நட்பு தினம்" என்று ஒரு தினத்தைக் கொண்டாட ஒரு குழுவை அமைத்தார்.

அன்னாவும் அவரது நண்பர்களும் தேசிய ரீதியில் தாய்க்குரிய நாள் விடுமுறையை ஏற்படுத்தும்படி ஒரு கடிதப் பிரசாரத்தை ஆரம்பித்தனர்.

1912 டிசம்பரில் "அன்னையர் தின சர்வதேச சங்கம்" நிறுவப்பட்டது. மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை தாய்க்குரிய நாளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கூட்டுத் தீர்மானத்தை, 1914 மே 8-இல் அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றியது.

பின்னர் இந்நாளில் தாயை அன்புடன் நினைவு கூருவதற்கு மேலாக, வர்த்தகர்களின் பேராசைக்கு இத்தினமும் பலியாகி, பரிசு வழங்குதலே பிரதானமாகியது.

இதனால் கோபமடைந்த அன்னா, அன்னையர் தின விழாவை நிறுத்தும்படி 1923-ல் வழக்குத் தொடர்ந்தார். 1948ல் இறப்பதன் முன்னர் இந்த தாய்க்குரிய நாள் மரபை ஏற்படுத்தியதற்காக அவர் மிகவும் மனம் வருந்தினார் என்று கூறப்படுகிறது.

ஆயினும் எல்லா நாடுகளிலும் இந்த தாய்க்குரிய நாள் கொண்டாட்டங்கள் பிரபலம் அடைந்தன. அந்த நாளை தாயுடன் தொடர்பு கொண்டு நன்றி தெரிவிப்பதற்கான நாளாக அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

தாயன்பின் சிறப்பைக் காட்ட எத்தனையோ கதைகள் உண்டு. அவற்றுள் சிறப்பான ஒரு நாடோடிக் கதை இது:

ஒருவன் ஒரு பெண்ணை மிக அதிகமாகக் காதலித்தான். ஆனால் அவள் மிகக் கொடுமையான மனம் கொண்டவள். எனவே, தான் அவனைத் திருமணம் செய்வதானால் அவன் தனது தாயின் இதயத்தைப் பரிசாகத் தரவேண்டும் என்ற ஒரு கொடிய வேண்டுகோளை இதயமே அற்றவளாகக் கேட்டாள்.

அவனுடைய கண்களை காதல் முற்றாக மறைத்திருந்தது. அவன் அவளது கோரிக்கைக்குச் சம்மதித்து தனது தாயைக் கொன்று அவளது இதயத்தை ஒரு தட்டில் வைத்து காதலிக்குத் தருவதற்காக எடுத்து வந்தான். வரும் வழியில் அவன் கல் தடுக்கி ஓரிடத்தில் விழுந்து விட்டான்.

அப்போது அந்தத் தட்டில் இருந்த தாயின் இதயம் கேட்டதாம் "மகனே நோகிறதா?"

வானுலகு சென்று திரும்பிய நபித்தூதர் சொன்னார்: சொர்க்கம் விண்ணில் இல்லை; அது இருப்பது அன்னையின் மலர்ப் பாதத்தில்!

- ஆசிரியர்

# தப்பிப் பிழைத்தது மலேசிய விமானம்

## கொழும்பு நோக்கி வந்த வேளை

(கொழும்பு)

மலேசியாவிலிருந்து நேற்று கொழும்பு நோக்கி பயணித்த மலேசிய விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஆர் 179 என்ற விமானம் அவசரமாக தரையிறங்கியது. மர்மமாகவே இருக்கின்றது என செய்திகள் வெளியாகியுள்ளன. விமானம் புறப்பட்டு சில மணி நேரங்களில் கோலாலம்பூர் விமான நிலையத்துக்கு விமானம் திரும்பியுள்ளது.

மலேசியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இந்த விமானம் மலாக்கா நீரிணைக்கு மேலாக இரண்டு மணிநேரம் வட்டமிட்டதன் பின்னரே கோலாலம்பூரில் தரையிறங்கியுள்ளது. விமானத்தில் கூடுதலாக எரிபொருட்கள் இருந்த நிலையில், அது தரையிறக்கப்பட்டமை ஆபத்தானது என்றும் மலாக்கா நீரிணைக்கு மேலாக விமானத்தை வட்டமடிக்கவேண்டிய நிலைமை விமானிக்கு ஏற்பட்டது என்றும் மலேசிய ஊடகங்கள் தெரிவித்தன. அதன் பிரகாரம் நேற்று முன் தினம் இரவு 11.30 மணிக்குப் புறப்பட்ட விமானம் மீண்டும் கோலாலம்பூர் விமான நிலையத்தில் அதிகாலை 1.30 மணிக்கு தரையிறங்கியுள்ளது. விமானம் மீண்டும் தரையிறங்கியமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்பட வில்லை. அது மர்மமாகவே உள்ளது.

இந்த விமானம் கோலாலம்பூரிலிருந்து புறப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.18 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடையவிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தேசிய நிறைவேற்றுப் பேரவையின் ஆயுளுக்கு நெருங்குகிறது ஆபத்து

அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய நிறைவேற்று பேரவையின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்தை அமுல்படுத்த ஆலோசனை பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே தேசிய நிறை வேற்றுப் பேரவை நிறுவப்பட்டது. தேசிய நிறைவேற்றுப் பேரவையின் பணிகளை தொடர்வதா இல்லையா என்பது குறித்து ஆளும் கட்சியின் பல்வேறு தரப்பினரும் ஆராய்ந்து வருவதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

100 நாள் திட்டத்தை நடைமுறைப்படுத்த தேசிய நிறைவேற்றுப் பேரவை நிறுவப்பட்டதாகவும், திட்டம் நிறைவடைந்துள்ளதனால் தொடர்ந்தும் அதன் பணிகளை முன்னெடுக்க வேண்டியதில்லை என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார். 19ஆம் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இதுவரையில் தேசிய நிறைவேற்றுப் பேரவை கூடவில்லை என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கூடுவதா இல்லையா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவும் இல்லை, அறிவிக்கப்படவுமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டு, தகவல் அறிந்து கொள்ளும் சட்டம் நிறைவேற்றப்படும் வரையில் தேசிய நிறைவேற்றுப் பேரவையின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென மேலும் சில உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவை வேண்டும்

## மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

தூத்துக்குடி மற்றும் கொழும்பிற்கிடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் தலைவர் கே.எம். காதர் மொய்தீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகள் தேர்தல் பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், வியாபார அபிவிருத்திக்காக தூத்துக்குடி - கொழும்பு இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதோடு, கச்சதீவை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# 19 ஆம் திருத்தத்துக்கு இறுதி ஒப்புதல் இந்த வாரம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆம் திருத்தச்சட்டத்திற்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இவ்வாரம் கையொப்பமிடுவார் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் சட்ட வல்லுனர்களால் ஆராயப்பட்டு வருகின்ற நிலையில் பின்னர் அது நீதவானிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதவானின் அங்கீகாரத்தின் பின்னர் சட்டமூலத்திற்கு சபாநாயகர் கையொப்பமிடுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமூலத்திற்கு சபாநாயகர் கையொப்பமிட்டு அனுமதி வழங்கிய பின்னர் சட்டமன்ற சபையை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பொதுபலசேனாவின் அரசியல் பிரவேசம்

## மீள் பரிசீலனைக்கு கோரிக்கை

(கொழும்பு)

சிங்கள பௌத்த சக்திகள் அனைத்தும் மகிந்த ராஜபக்ஷவுடன் சூழ்ந்துள்ள வேளையில் பொதுபலசேனா தனியாக கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கு எடுத்துள்ள தீர்மானம், திரும்ப மீள்பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டிய ஒரு விடயம் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய ஞாயிறு தேசிய சிங்கள சஞ்சிகையொன்றின் கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுபலசேனா இந்நாட்டின் பலமான சமயம் சார்ந்த ஒரு அமைப்பாக இருக்க வேண்டும் என்பதே எமது அபிப்பிராயம். மாறாக அரசியல் கட்சியாக அல்ல. இதனால், அரசியலுக்குள் நுழைவது குறித்து பொதுபலசேனா ஒருமுறைக்கு இருமுறை சிந்திக்க வேண்டும். புத்திசாதுர்யமாக சிந்திப்பது தேசிய அமைப்பொன்றுக்கு முக்கியமானது. தேர்தலை இலக்கு வைத்து தீர்மானங்களை எடுப்பது உசிதமானதல்ல எனவும் நீண்ட கட்டுரையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மீண்டும் நடக்கும் மகிந்தவுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே மற்றுமொரு சந்திப்பு நடத்தப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்து வரும் இரண்டு வாரங்களுக்குள் இந்த சந்திப்பை நடத்த கட்சியினர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 6ஆம் திகதி இருவருக்குமிடையே நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் சந்திப்பு இடம்பெற்ற போதும் அதன் போது இணக்கப்பாடுகள் ஏற்பட்டிருக்காத நிலையிலேயே மீண்டும் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வதற்கு கட்சியினர் முயற்சித்துள்ளனர்.

# மெதுமெதுவாக வாயைத் திறப்போம்!

(செப்டம்பர் 2012ல் பூபாளம் இதழில் வெளியான 'ஏடு இட்டோர் இயல்' பத்தியிலிருந்து.)

**உண்மையான சமூக நோக்கம் கொண்டவர்கள் எல்லாம் விலகிப் போக... ஏமாற்றுக்காரர்கள் தான் இன்றைக்கு எங்கள் சமூகத்தில் கோலோச்சுகிறார்கள். எங்கள் சமூகம் இன்றைக்கு தனது இனத்தைப் பற்றிய கவலை இல்லாமல், வெறும் பாசாங்கு மட்டும் காட்டிக் கொண்டிருக்கிறது. எமது இனம் நன்றாகவே நடிக்கக் கற்றுக் கொண்டு விட்டது.**

**ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்**

**பெரியோர் வழி நட!**
**ஊரோடு ஒத்தோடு!**

எமது சமூகத்தில் எங்களுக்கு சிறுவயதிலிருந்தே சொல்லித் தரப்படுபவை இவை. பெரியவர்கள் தங்கள் அனுபவங்களால் பெற்ற அறிவினால், வழி காட்டுவதற்கு தகுதியானவர்கள் என்பதே எங்கள் சமூகத்தின் நிலைப்பாடு. அவர்களின் வழி காட்டலை எந்தக் கேட்டுக் கேள்வியும் இன்றி விசுவசித்து அதன்படி ஒழுகுதல் என்பது சமூகக் கடமையாகவே கொள்ளப்படுகிறது.

மறுபுறத்தில் ஊரோடு ஒத்தோடுவது என்பதே "எல்லாரும் செய்வதால் அதில் ஏதோ விசயம் இருக்க வேண்டும்" என்ற உணர்வினால் ஆனதாக இருக்கலாம். அதைவிட, ஊர் செய்கின்ற ஒன்றுக்கு முரணாக நடந்தால், தங்களுக்கு கறுப்பு ஆடு என்று முத்திரை குத்தப்படும் என்ற பயத்தினாலும் இருக்கலாம்.

ஆனால், பெரியவர்களின் வழி காட்டலின்படி தான் எங்கள் சமூகம் இதுவரை காலமும் நடந்திருந்தால், நாங்களும் கோவணாண்டிகளாக அம்பும் வில்லுடனும் தான் இருந்திருப்போம். அத்தோடு எந்தக் கேள்வியும் இன்றி, ஊரோடு ஒத்தோடுவது தான் எங்கள் பண்பாடு என்றால் நாங்கள் செம்மறிகளாகத் தான் இருக்க வேண்டும்.

எங்கள் சமூகம் சமூக விதிமுறைகளை யாரும் மீறுவதை ஏற்றுக் கொள்வதில்லை. இதனால், பலரும் "எனக்கு ஏன் வீண் பிரச்சினை?" என்று மந்தைகள் போல, ஊரோடு ஒத்தோடுவது அனாவசியமான தொல்லைகளைத் தவிர்க்கும் என்ற எண்ணத்தில், வாயை மூடிக் கொண்டே ஊருக்குப் பின்னால் ஓடிக் கொண்டே இருக்கிறார்கள்.

விளைவு?

இன்று மீள முடியாத அதல பாதாளத்தில் எல்லோரும், முழுத் தமிழினமும், வீழ்ந்து போயிருக்கிறோம்.

எமது சமூகம் குரூரமானது. எமது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நம்பிக்கைகளை கேள்வி கேட்பவர்களை அது மன்னிப்பதில்லை. சாதி, சமயங்களுக்கு எதிரான போராட்டங்களை நடத்திய கம்யூனிஸ்டுகளையும் சரி, ஆயுதப் போராட்டத்துடன் கூடிய தமிழீழத்தை கேள்வி கேட்டவர்களையும் சரி, சமூகம் தீண்டத்தகாதவர்களாகத் தான் பார்த்திருக்கிறது.

அரசியல் மட்டுமல்ல, சமூக மாற்றத்தை வேண்டியவர்களைக் கூட, ஏளனப் பார்வையுடன் தான் எமது சமூகம் பார்க்கிறது. சீதனம் வாங்க மாட்டேன் என்று ஒருவன் சீர்திருத்த நோக்கில் சொன்னாலும், "உவருக்கு ஏதோ குறை போல" என்று வக்கிரபுத்தியுடன் சொல்வது தான் எங்கள் சமூகம். எங்கள் சமூகத்திற்காக நன்மை செய்ய யாராவது வந்தாலும் 'உவர் தனக்கு லாபம் இல்லாமல் உதைச் செய்யிறாரோ?" என்று சந்தேகம் கொள்வது தான் எங்கள் சமூகம். இங்கே எங்கள் சமூகம் செய்கின்ற மோசடிகளைப் பற்றிச் சொன்னாலேயே "உவருக்கு என்ன பிரச்சினையாம்? தன்ரை காசையே தாறார்?" என்ற கேள்வி தான் எழும்.

இதனால், உண்மையான சமூக நோக்கம் கொண்டவர்கள் எல்லாம் விலகிப் போக... ஏமாற்றுக்காரர்கள் தான் இன்றைக்கு எங்கள் சமூகத்தில் கோலோச்சுகிறார்கள். எங்கள் சமூகம் இன்றைக்கு தனது இனத்தைப் பற்றிய கவலை இல்லாமல், வெறும் பாசாங்கு மட்டும் காட்டிக் கொண்டிருக்கிறது. எமது இனம் நன்றாகவே நடிக்கக் கற்றுக் கொண்டு விட்டது.

இன்று கூட, ஒரு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கு எதிராக எதையும் சொல்ல முடியவில்லை. துரோகி, கைக்கூலி, காட்டிக் கொடுப்பவன், வளர்ப்புப் பிராணி என்ற பட்டங்கள் தொடக்கம் மரபணு மீதான சந்தேகம் வரையில்... வசைகளுக்கு ஆளாகாமல், எந்த மாறான கருத்தையும் சமூகத்தில் சொல்ல முடியவில்லை.

விருப்பமோ, இல்லையோ, ஊரோடு ஒத்தோடித் தான் ஆக வேண்டும்!

ஊரோடு ஒத்தோடுவது என்பது ஒரு கால கட்டத்தில் மிகவும் கொடூரமாக அமுல்படுத்தப்பட்ட ஒன்று. ஓடாதவர்கள் கறுப்பு ஆடுகளாய் இனம் காணப்பட்டு, பலியிடப்பட்டார்கள். மற்ற ஆடுகள் பலியிடப்பட்டதைக் கண்டவர்கள் பலர் வாயை மூடிக் கொண்டார்கள். வேறு பல்ர், தாங்கள் பலியிடப்படாமல் இருக்க, நடிக்கத் தொடங்கினார்கள். நடிக்கத் தொடங்கியவர்கள் நல்ல பேர் வாங்க, புகழ்ந்து ஏத்தத் தொடங்கினார்கள்.

சமூகம் ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்தை செய்வது பலவந்தமாக மறுக்கப்பட்டது.

"பெரியோர்" சொல்படி கேட்டு, ஊரோடு ஒத்தோடுவது என்பது உத்தியோகபூர்வமாக கடுமையாக அமுல்படுத்தப்பட்ட கொள்கையாகவே மாறி விட்டிருந்தது.

இன்னமும் யாரும் வாயைத் திறக்கிறார்கள் இல்லை. வாயைத் திறக்கவும் முடியவில்லை. வாயைத் திறப்பவனைச் சந்தேகத்துடன் பார்த்து, "அரசாங்கம் பணம் கொடுக்காமல் வாயைத் திறந்திருப்பானோ?" என்று எவனாவது கிளப்பும் வதந்தியை நம்பும் அளவுக்குத் தான் எங்கள் சமூகம் இருக்கிறது. தமிழன் சொந்தமாக வாயைத் திறக்கும் அளவுக்கு சூடு சுரண்ண இல்லாதவன், இவனுக்கு வேறு யாரோ பணம் கொடுத்துத் தான் இவன் வாயைத் திறப்பான் என்கிற அளவுக்குத் தான் எங்கள் சமூகம் இருக்கிறது!

"வாயை மூடிக் கொண்டிரு, உனக்கு ஏன் தேவையில்லாத பிரச்சினை?"

இதைத் தான் தாய்மாரும், மனைவிமாரும் இந்த மறத் தமிழர்களுக்குச் சொல்லி வீரப்பால் ஊட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தின் அழிவிற்கான காரணங்களைப் பேசுவது கூட "தேவையில்லாத பிரச்சினை" ஆகிவிட்டது.

பலர் தாங்கள் ஏதோ "மரணத்துக்கு அஞ்சா மாவீரர்கள் போல" வாய் வீசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஒன்றும் வாய்மூடிகள் இல்லை, அரசாங்கத்திற்கு எதிராக வாயைத் திறந்திருக்கிறோமே என்று வீரவசனம் பேசுகிறார்கள்.

இதைக் கேட்டதும் பழைய துணுக்கு ஞாபகம் வருகிறது.

அமெரிக்கனும் ரஷ்யனும் சந்தித்த போது, அமெரிக்கன் சொன்னான், "எங்கள் நாட்டில் சுதந்திரம் இருக்கிறது. நான் எங்கள் நாட்டு ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்னால் போய், "எங்கள் ஜனாதிபதி ஒரு முட்டாள்" என்று திட்டலாம்...

ரஷ்யன் சொன்னானாம், "உதென்ன பெரிய விசயம். எங்கள் நாட்டிலும் தான் சுதந்திரம் இருக்கிறது. எங்கள் நாட்டு ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்னால் போய் நின்று 'அமெரிக்க ஜனாதிபதி ஒரு முட்டாள்' என்று திட்டலாம்."

இன்றைக்கும் இது தான் நடக்கிறது.

உலகில் எந்த மூலையில் இருந்தும் யாரும் மகிந்தவை கழுவில் ஏற்றுவதாக சபதம் செய்யலாம். இந்தியாவுக்கு சவால் விடலாம். நோர்வேயை மிரட்டலாம். ஒபாமாவுக்கு எச்சரிக்கை விடலாம். துரோகிகளுக்கு மரண தண்டனைத் தீர்ப்பும் வழங்கலாம்.

இது எந்த வடி கட்டின முட்டாளும் செய்யக் கூடியது தான். அதைத் தான் இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். செய்து முடிந்த பின்னால், வெள்ளை வான் கவலையின்றி ஊருக்கும் போய் வரலாம்.

இப்படி எத்தனை நாளைக்கு தொடரப் போகிறது இந்த நடிப்பு?

யாருக்கு இப்போது பயப்படுகிறோம்? எந்த நிழலைப் பார்த்து இத்தனை பயம்?

இதுவரை காலமும் பெரியோர்களின் வழி நடந்துதான் இந்த இழிநிலைக்கு வந்திருக்கிறோம். ஊரோடி ஒத்தோடித் தான் படுகுழிக்குள் விழுந்திருக்கிறோம்.

இந்த அழிவிலிருந்து மீண்டு வருவதாக இருந்தால் நாங்கள் வாயைத் திறக்கத் தொடங்க வேண்டும்.

கேள்விகளுக்கு அப்பாற்பட்ட தேவர்களும் இல்லை, புனிதர்களும் இல்லை.

எல்லாரையும் எல்லாவற்றையும் கேள்விக்கு உள்ளாக்க வேண்டும்.

பெரியோர்களின் வழிகளை புதியவர்கள் கேள்வி கேட்டதால் தான் உலகம் வளர்ந்தது. ஊரோடு ஒத்தோடாமல், வேறு பாதைகளை வகுத்தவர்களால் தான் உலகம் செழித்தது.

எங்கள் முன்னால் உள்ள கேள்விகள் பல.

மகிந்தவை "யதார்த்தவாதி" என்று கூறி அரசு கட்டில் ஏற்றியது சரியா?

கருணாவைத் துரோகி என்று பலம் இழந்தது சரியா?

இந்தியாவைப் பகைத்துக் கொண்டு இறுதியில் கையறுந்தது சரியா?

முழு உலகத்தையும் மதிக்காமல் திமிருடன் தனிமைப்பட்டு நின்றது சரியா?

தோளோடு தோள் கொடுக்க சகோதரர்களை அழைக்காமல், மற்ற இயக்கங்களை அழித்தது சரியா?

போராட்டத்தின் பெயரால் எங்களுக்குச் சொல்லப்பட்டவை எல்லாம் உண்மைகளா?

எங்கள் இனத்தின் தலைவிதியையும் எதிர்காலத்தையும் ஒரு தனிமனிதனின் கையில் திணித்தது சரியா?

இதெல்லாம் எங்கள் முன்னால் உள்ள கேள்விகளில் சில.

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல இன்றைக்கு யாரும் இல்லை. பதில் சொல்ல ஆளில்லை என்பதால் கேள்விகளைக் கேட்பதை நிறுத்த வேண்டியதில்லை.

எங்கள் தவறுகளிலிருந்து நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால், நாங்கள் மனம் திறந்து பேச ஆரம்பிக்க வேண்டும்.

"சரி, நடந்தது நடந்து விட்டது, ஆனால் இன்னொரு தடவை இப்படியொரு நிலைமை வர விடக் கூடாது. எனவே, என்ன பிழை நடந்தது என்பதை நாங்கள் அறிந்து கொண்டால் மட்டுமே, இன்னொரு தடவை அந்தப் பிழை நடக்காமல் பார்க்க முடியும்"

இந்த எண்ணம் எங்கள் மனதில் வர வேண்டும்.

முன்பு தான், போராட்டம் நடக்கிறது. கேள்விகள் கேட்டால் போராட்டம் பின்னடையும் என்றெல்லாம் பெரியவர்கள் சொன்னார்கள். நாங்களும் ஊரோடு ஒத்தோடினோம். விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் எங்கள் அடிப்படை மனித உரிமைகளை தாரை வார்த்தோம்.

இன்றைக்கு எதுவுமே இல்லை. இப்போது பேச என்ன தயக்கம்?

எங்கள் சமூகம் இன்னொரு தடவை படுபாதாளத்தில் விழாமல் இருக்க வேண்டும் என்றால், எவருக்கும் பயமில்லாமல், நாங்கள் மெதுமெதுவாக வாயைத் திறக்க ஆரம்பிக்க வேண்டும்.

# யுத்த வெற்றி விழா இந்த ஆண்டு இல்லை

## போரில் மரணித்த அனைவரையும் நினைவுகூர ஏற்பாடு

(கொழும்பு)

வரும் மே 18 ஆம் திகதி இலங்கையில்போரில் இறந்த அனைவரையும் நினைவு கூரும் நாளாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வெற்றி கொண்ட மே 18 ஆம் திகதி கடந்த வருடங்களில் ஆயுதப்படையினரின் நாளாகப் பிரகடனம் செய்யப்பட்டு, போர் வெற்றி விழாவாக கடந்த காலங்களில் கொண்டாடப்பட்டு வந்தன.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால், ஒழுங்கு செய்யப்பட்டு வந்த நிகழ்வு இந்த ஆண்டு மாத்தறையில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கம், மே 18 ஆம் திகதி வித்தியாசமான முறையில் கடைப்பிடிக்கவுள்ளது.

இந்த நாள், போரில் இறந்த அனைவரையும் நினைவு கூரும் நாளாக கடைப் பிடிக்கப்படவுள்ளது என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வருகிறது இருபதாவது திருத்தம்

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை உள்ளடக்கப்பட்ட 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தை மிக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தேர்தல் முறை தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்கு கட்சித் தலைவர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்றை ஜனாதிபதி செயலகத்தில் நடாத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்பாடு செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இறுதித் தீர்மானம் மேற்கொண்டதன் பின்னர் அத்தீர்மானம் நாளை மறுதினம் அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொண்டு அன்றைய தினமே வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடுவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பின்னர் சட்டமூலத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதோடு 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# உங்களின் EPF கணக்கின் பணத்தை மீளப்பெற வாய்ப்பு

## 30 வீதத்துக்கு மட்டும் அனுமதி

ஊழியர் சேமலாப நிதியத்தில் 30 வீதமான பணத்தை பெற்றுக் கொள்ள மீண்டும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 27 ஆம் திகதி முதல் இந்த புதிய நடைமுறை அமுலபடுத்தப்படவுள்ளது.

மூன்று இலட்சம் ரூபாவிற்கு மேல் ஊழியர் சேமலாப நிதியை வைப்பாகக் கொண்டவர்கள், மொத்த தொகையில் 30 வீதத்தை உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும் என தொழில் அமைச்சர் எஸ்.பி. நாவீன்ன தெரிவித்துள்ளார்.

அவசர நோய்கள் அல்லது வீடு கட்டுதல் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்காக இவ்வாறு பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். உச்சபட்சமாக 20 இலட்சம் ரூபா பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளார்.

# இல்லவே இல்லை வதை முகாம்கள்

நாட்டில் இரகசிய வதை முகாம்கள் உள்ளன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டினை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மறுத்துள்ளார்.

கொழும்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். காணாமற்போன தங்களுடைய குழந்தைகளை தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு கடந்த வாரம் எனக்கு கிடைத்தது,

அதன் போது இரகசிய முகாம்கள் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அவ்வாறான எதுவும் இலங்கையில் இல்லை என்ற உத்தரவாதத்தை நான் அவர்களுக்கு வழங்கினேன்.



அவ்வாறான இரகசிய முகாம்கள் குறித்த விபரங்களை அவர்கள் வெளியிட்டால் அது குறித்து முழுமையான விபரங்களை அவர்கள் தந்தால் முழுமையான விசாரணைகள் இடம்பெறும் என தெரிவித்தேன் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவும், நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் இரக்சிய முகாம்கள் குறித்து ஒருவருக்கொருவர் முரணாண கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையிலேயே வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

# மோசடிக்குத் துணைபோக அரசு தயாராக இல்லை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் இடையில் என்னதான் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் மோஷடிக்காரர்களை பாதுகாப்பதற்கு எந்தவிதத்திலும் இடமளிக்கப் போவதில்லையென கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வெயாங்கொடயில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்து என்னிடமும் பலர் விசாரித்தார்கள். என்ன பேசினார்கள் எனவும் கேட்கிறார்கள். நான் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவில்லை.

இருப்பினும், மோசடிகளில் ஈடுபட்டவர்களைப் பாதுகாப்பதற்கு எந்த நிபந்தனைகளை விதித்தாலும் அவற்றுக்கு தலைசாய்க்கப் போவதில்லையென என்னிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட ரீதியில் சந்தித்துப் பேசும் போது கூறியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

# ஐ.நா. செயற்பாடடுக்குழு கொழும்பு வருகிறது

## காணாமற்போனோர் விவகாரம் சூடு

காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பில் விசாரித்து அறிய ஐ.நா.வின் செயற்பாட்டுக் குழு எதிர்வரும் ஓகஸ்ட் 3 ஆம் திகதி இலங்கை வருகிறது. இந்த அமைப்பு 30 நாடுகளில் காணாமற்போகச் செயயப்பட்ட 400 சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது இலங்கையில் இடம்பெற்ற காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்து தொடர்பில விசாரிக்க ஓகஸ்ட் 3 ஆம் திகதி இலங்கைக்கு வரும இக்குழு 12 ஆம் திகதி வரை தங்கியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இக்காலப்பகுதிக்குள் தனிப்பட்ட வழக்குகள் தொடர்பிலும், மக்கள் பிரதிநிதிகள், காணாமறபோகச் செய்யப்பட்டோரின உற வ்னர், சிவில் சமூகப் பிரதிநிதிகளை இக்குழு சந்திக்கும் இந்தக் குழு வினர் இலங்கைக்கு வர முன்னைய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. ஆனால் இந்தக் குழுவினர் ஓகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு வர புதிய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறிய கட்சிகளை புதிய தேர்தல் முறை ஒருபோதும் பாதிக்காது "கபே" கணிப்பு

புதிய தேர்தல் முறைமையினால் சிறு கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை என கபே தெரிவித்துள்ளது. புதிய தேர்தல் முறைமை நன்மையை ஏற்படுத்தும் என கபே என்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறைமையினால் சிறு கட்சிகள் தங்களது பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2004 மற்றும் 2010 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்த போது சிறு கட்சிகள் புதிய முறைமையில் போட்டியிட்டாலும் அதேயளவு ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் என தெரியவந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் கணக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

# மிக் விமானக் கொள்வனவில் நிதி மோசடி நடந்ததா?

## கோத்தா மீண்டும் விசாரணைக்கு



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை இன்று விசாரணைக்கு வருமாறு பொலிஸ் நிதி மோசடி தடுப்பு பிரிவு (FCID) கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளது.

மிக் ரக விமானக் கொள்வனவு தொடர்பில் கொடுக்கல் வாங்கல் மற்றும் லங்கா வைத்திய சாலை பங்கு விற்பனை மோசடி தொடர்பில் விசாரணை நடாத்தவென இவர் அழைக்கப்பட்டுள்ளார். அடுத்த வாரத்தில் கோத்தாபய கைதாகலாமென தகவல்கள் கசிந்த நிலையில் அதனை உறுதி செய்யும் விதமாக இன்று திங்கட்கிழமை விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த விசாரணையைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்படும் சாத்தியம் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பொதுத் தேர்தலுக்கு மூவாயிரம் மில்லியன்

## மதிப்பீடு தயார்

(கொழும்பு)


எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கு மூவாயிரம் மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை நடாத்த மூவாயிரம் மில்லியன் ரூபா செலவாகும் என இலங்கைத் தேர்தல்கள் திணைக்களம் மதிப்பீடு செய்துள்ளது.

தபால் திணைக்களம் அரச அச்சகக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றுக்கு அதிகளவு பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டியேற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலகளை நடாத்த வேண்டுமாயின அதற்கும் 3 ஆயிரத்து 250 மில்லியன் ரூபா பணம் தேவைப்படும் என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சில மாத கால இடைவெளியில் இரு தேர்தல்களை நடாத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதினால் 6, ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பணம் தேவைப்படும் என தேர்தல்கள் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.





நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித் பெரேரா தலைமையில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. இதன் போது காங்கேசந்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எ.எம்.ஜவர் கலந்து கொண்டு அணிவகுப்பு மரியாதையை பார்வையிடுவதையும், வாகனங்களை பார்வையிடுவதையும் காணலாம். (18)

# சமூகவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த இளைஞர்கள் கலைத்துறையில் ஈடுபடவேண்டும்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

இளைய தலைமுறையினரை கலைத்துறையில் ஈடுபடுத்துவதன் மூலமே நாட்டில் சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். எனவே பெற்றோர் தமது பிள்ளைகளை ஏதாவது ஒரு கலையில் ஈடுபடுத்த முன்வரவேண்டும்.

இவ்வாறு காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்திய கலைவிழாவிலும் பரிசளிப்பு வைபவத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் குறிப்பிட்டார்.

கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் அரசாங்க அதிபர் தொரடந்து தெரிவித்ததாவது,

நான் இங்கு வரும்போது இப்படி ஒரு அற்புதமான நிகழ்வுகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கவில்லை. அழகாக அமைகக்கப்பட்டுள்ள அரங்கத்தில் பெருந திரளான மக்கள மத்தியில் இங்குள்ள மாணவர்கள் அற்புதமாக கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்தார்கள். இவ்வாறான நிகழ்வுகள் காரைநகரிலேதான் நடைபெற முடியும். இத்தகைய நிகழ்வுகளுக்கு வாரிவழங்கும் பரோபகாரிகள் பலர் காரைநகரைச் சேர்ந்தவர்களே.

கிழவன்காடு கலாமன்றம் கடந்த 15 ஆண்டுகளாக இவ்வூர்ப் பிள்ளைகளுக்கு வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, கஞ்சிரா, யோகாசனம், பரதம் போன்ற கலைகளைச் சிறப்பாகப் போதித்து வருகிறது. இம்மன்றத்தின் கலைஞர்கள் குடாநாட்டின் பல்வேறு நிகழ்வுகளிலும் சிறப்பாகத் தமது கலைகளை அரங்கேற்றி வருகின்றார்கள்.

இப்பிரதேச மக்களின் கலைத துறை வளர்ச்சிக்கு கிழவன்காடு கலாமன்றம் ஆற்றிவரும் பணி போற்றுதற்குரியது. இவர்கள் செயற்படும் விதம் ஏனைய பிரதேச மக்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

சிறுவர்கள் கலைத்துறைகளில் ஈடுபடுவதற்கான வசதிகளை எல்லாப் பிரதேசங்களிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கிராமங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகள் நிறுவப்பட வேண்டும். அவற்றின் ஊடாக இளம் சிறார்களுக்கு சிறந்த நல் ஒழுக்க விழுமியங்களைப் போதிக்கவேண்டும்.

இந்நிகழ்வில் காரைநகர் பிர்தேச செயலர் திருமதி.தேவநதினி பாபு, யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இராக சுரபி காரை.பரமேஸ்வரி கணேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

தொழிலதிபர் கல்விக்கருண்யன் ஈ.எஸ்.பீ.நாகரத்தினம், கலைமாடக்கோன் சண்முகம் சிவஞானம், தொழிலதிபர் கனக சபை அருள்நேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மிருதங்க இசை, வயலின் இசை அரங்க ஆற்றுகை, யோகாசன நிகழ்வு நாட்டியாஞ்சலி, நாடகம் ஆகிய கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. கலாமன்ற உபதலைவர் ச.இராசநாயகம் நன்றி நவின்றார். (10)

# நிதி அன்பளிப்பு

(வரணி)

யாழ்.வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களின் பாவனைக்காக கணனி கொள்வனவிற்கென தர்மலிங்கம் சித்தார்த்தன் ரூபா 40 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாக பாடசாலை அதிபர் வை.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வட வரணி கௌரிபாலன் முன்பள்ளி திருத்த வேலைகளுக்கும் த.சித்தார்த்தனால் 30 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளதாக முன்பள்ளி ஆசிரியர் திருமதி.ச.மதுரா தெரிவித்தார்.

மேலும் முன்பள்ளிக் கட்டட ஓடுகள் உடைந்த நிலையில் காணப்படுவதுடன் மேற்கூரைகள் சிலவற்றை குரங்குகள் சேதப்படுத்திய நிலையிலே இப்பண உதவி கிடைத்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (150)

# பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் பொருட்டு பரீட்சார்த்திகளிடம் விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் பொருட்டு ஆகஸ்ட் 2014 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சையில் ஆகக்குறைந்த தேவைகளை திருப்தி செய்துள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கல்வியாண்டு 2014 / 2015 முதல் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் இணையத்தின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

இணையத்தள சேவையினூடாக விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் பல்கலைக்கழக அனுமதிக் கைநூலில் தரப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள விநியோக முகவர்களிடமிருந்து 500 ரூபா பணம் செலுத்தி பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணபத்தை உள்ளடக்கிய "இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதி - கல்வியாண்டு 2014 / 2015 எனப் பெயரிடப்பட்ட அனுமதி பற்றிய கைநூலோடு ஒரு கணனி தகவல்பத்திரம் மேலும் ஒரு பெரிய "(30 செ.மீ x 25.செ.மீ) கடித உறையும் கொடுக்கப்படும் பரீட்சார்த்திகள் கைநூலை வாங்கும் போது மேற்சொல்லப்பட்ட எல்லாப் பத்திரங்களையும் கவனித்து வாங்க வேண்டும்.

இணையத்தள வசதியற்ற விண்ணப்பதாரிகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (NAC centers) கல்வியமைச்சின் மாகாண மற்றும் வலய கணனி வள நிலையங்கள் அறிவகம் (Nenasala) நிலையங்களுக்கும் அலுவலக நேரங்களில சென்று அவர்களின் நிபந்தனைக்களுக்குட்பட்டு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறான சகல நிலையங்களினதும் விபரம் அனுமதிக்கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை அல்லது தபால் அறிமுகஅட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தாது உறுதி செய்யப்பட்ட புகைப்படத்திணைப் பயன்படுத்தி க.பொ.த.உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தற்போது தேசிய அடையாள அட்டை இல்லாத மாணவர்கள் மற்றும் இணையத்தள வசதியற்ற மாணவர்கள் கைந்நூலின் இறுதியில் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினையும், கணனித்தரவுப்படிவத்தினையும் உரிய முறையில் பூர்த்தி செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பதிவுத் தபாலில் அனுப் பிவைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்களின் முடிவுத் திகதி மே.29 ஆகும்.

# கதிரைகள் வழங்கப்பட்டன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நன்னீர் மீன்பிடியாளர் சங்கங்களுக்கு பிளாஸ்ரிக் கதிரைகளை வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் வழங்கிவைததார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 09 நன்னீர் மீன்பிடி சங்கங்களுக்கு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட -செயலகத்தில், ஒவ்வொரு சங்கங்களுக்கும் தலா 25 கதிரைகள் வீதம் வழங்கி வைத்தார் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (160)

## முரசின் இன்றைய பலன்

(11.05.2015 திங்கட்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 28 ஆம் திகதி.
அட்டமித் திதி. அமிர்த சித்த யோகம்.
திருவோணம் நட்சத்திரம் மு.ப.09.27 வரை. பின் அவிட்டம்.
இராகுகாலம் 07.24-08.54 வரை சுபநேரம் 11.54-01.24 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பயணத்தின்போது ஆவணங்கள் தொலையும் அபாய நிலை உண்டாகும்.

**ரிஷபம்**
பழையதை புதிதாக்கி கட்டியழக்க முயல்வார்கள்.

**மிதுனம்**
உதவி செய்ய வெளிக்கிட்டு மான பங்கம் தக்க வைத்தல்.

**கடகம்**
தேங்கியவற்றை விற்பனை செய்ய யுக்தி வியூகங்களை வகுத்தல்.

**சிம்மம்**
விலங்குகளினால் துன்ப நிலை ஏற்பட்டு வருத்தலாம்.

**கன்னி**
பகைவர்களின் தொல்லை அற்றுப்போக தெய்வ தரிசனத்தை மேற்கொள்ளல்.

**துலாம்**
தூக்கி விட்டவர்கள் பாராமுகமாக இருப்பதை எண்ணி விசனமடைதல்.

**விருச்சிகம்**
முதிர் கன்னிகள் விவாகமின்றி இருப்பதைக்கண்டு கவலையில் மூழ்குதல்.

**தனுசு**
பூர்விகச் சொத்து சம்பந்தமாக தீர்வின்றி இழுபறி ஏற்படல்.

**மகரம்**
கட்டுமீறிய செலவுகளைக் கண்டு திண்டாட்ட நிலை தக்க வைத்தல்.

**கும்பம்**
பிள்ளைகளுக்கு கூறும் புத்தி மதிகள் புறக்குடத்தில் ஊற்றிய நீராதல்.

**மீனம்**
பயணநிமித்தம் சொந்த பந்தங்களைக் கைவிட்டு பிரிய நேரிடும்.

# மட்ரிட் ஓப்பன்; செக்குடியரசு வீராங்கனை சம்பியன்


(மட்ரிட்)

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை செக் குடியரசின் பெட்ரா கிவிடோவா கைப்பற்றிக்கொண்டார்.

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் உள்ள மட்ரிட் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையருக்கான இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் செக் குடியரசின் பெட்ரா கிவிடோவாவும் ரஷ்யாவைச் சேர்ந்த குஷ்நெட்சோவாவும் பலப்பரீட்சை நடாத்தினார்கள். இதில் 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்கில் பெட்ரா கிவிடோவா எளிதில் வென்று மட்ரிட் ஓப்பன் பட்டத்தை 2ஆவது முறையாக தட்டிச் சென்றார்.

ரஷ்ய வீராங்கனை போட்டிக்கிடையே மெடிக்கல் டைம் அவுட் எடுத்துக்கொண்டார். இருந்தாலும் அது அவருக்கு பயனளிக்கவில்லை.

பெட்ரா கிவிடோவா 27 போட்டிகளில் தோல்வியே சந்திக்காத செரீனா வில்[illegible] அரையிறுதியில் தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது. இந்தக் கிண்ணத்தை வெல்வதற்கு கிவிடோவா 11 மணி நேரம் செலவழித்துள்ளார்.



இந்த வெற்றி குறித்து குவிடோவா கூறுகையில், மட்ரிட் ஓப்பனை வென்றதை மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். 2ஆவது முறையாக மட்ரிட் ஓப்பனை வென்றதால் நான் உண்மையிலேயே அதிக மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி நடால் முன்னேறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சுடன் மோதிய நடால் 7-6 (7-3) என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் அதிரடியாக விளையாடிய அவர் பெர்டிச்சின் சேர்வீஸ் ஆட்டங்களை எளிதாக முறியடித்து புள்ளிகளைக் குவித்தார். ஒரு மணி, 43 நிமிடம் நீடித்த இந்தப் போட்டியில், நடால் 7-6 (7-3), 6-1 என்ற நேர் செட்களில் வென்று இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் லூகாஸ் பிராங்கோ 6-2, 6-1 என்ற நேர் செட்களில் நிகிடா டாட்யானினை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

## இன்றைய ஆட்டம்

PEPSI IPL

ஹைதராபாத் எதிர் பஞ்சாப்

இடம் : ஹைதராபாத்

நேரம் : இரவு 8.00 மணி

## ஆ[illegible]யை அடக்குவோம்



அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் சிறப்பாகச் செயற்படக்கூடிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளர் பில் சைமன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியதீவுகள் சிறப்பாக செயற்பட்டுள்ளது. இது அணிக்கு சிறந்த நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. அத்துடன் அணியின் இளம் வீரர்களின் சிறப்பான திறமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தொடரிலும் மேற்கிந்தியத்தீவுகளால் சாதிக்க முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவுஸ்ரேலியா மற்றும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் யூன் மாதம் 3ஆம் திகதி டொமினிக்காவில் நடைபெறவுள்ளது.

# இங்கிலாந்து பயிற்றுநர் அதிரடி நீக்கம்



(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த பீற்றர் மூர்ஸ் நேற்று அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் மோசமான தோல்வி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில் தோல்வியடைந்து தொடரை வெல்ல முடியாமற் போனது போன்ற காரணத்தினால் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைமை நிர்வாகி டொம் ஹரிஸன் இந்த முடிவை எடுத்துள்ளார்.

பீற்றர் மூர்ஸ் குறித்து ஹரிஸன் குறிப்பிடுகையில், பீற்றர் சிறந்த ஒருமைப்பாடு மிகுந்த ஒரு மனிதன். இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்காக அவர் பெரும் பங்களிப்பை அளித்துள்ளார் எனக் குறிப்பிட்டார்.

மேலும், இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வருங்காலத்தை கருத்தில் கொண்டும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் இங்கிலாந்து அணியை சிறப்பானதாக கொண்டு செல்வதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

உதவி பயிற்சியாளராக இருந்த போல் பேர்பிராஸ் நியூசிலாந்துக்கு எதிரான 2 டெஸ்ட் கொண்ட தொடர் வரை மூர்ஸ் பணியையும் சேர்த்து கவனிப்பார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புள்ளிப் பட்டியலில் முதலிடம் முதன்முறையாக கொல்கத்தா



(சென்னை)

எட்டாவது ஐ.பி.எல். ருவெண்ரி-20 கிரிக்கெட் போட்டி கடந்த மாதம் 8ஆம் திகதி தொடங்கியது. நேற்று முன்தினத்துடன் 45 ஆட்டம் முடிந்துள்ளது.

இந்தப் போட்டியின் தொடக்கத்தில் இருந்தே ராஜஸ்தான் ரோயல்ஸ் புள்ளிகள் பட்டியலில் முன்னிலையில் இருந்தது. பின்னர் சென்னை சூப்பர் கிங்ஸ் அந்த அணியை பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து இரண்டு அணிகளும் மாறிமாறி முன்னிலை பெற்றனர்.

கடந்த சில தினங்களாக சென்னை அணியே முதல் இடத்தில் இருந்தது. தற்போது நடப்பு சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் புள்ளிகள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

அந்த அணி நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்பை வீழ்த்தியதன் மூலம் முன்னிலை பெற்றது. கொல்கத்தா அணி 12 ஆட்டத்தில் 7இல் வெற்றி பெற்றது. 4 போட்டியில் தோற்றது. ஒரு ஆட்டம் முடிவு இல்லை, 15 புள்ளியுடன் முதல் இடத்தில் உள்ளது.

சென்னை, ராஜஸ்தான் அணிகள் தலா 14 புள்ளிகளுடன் அதற்கு அடுத்த நிலையில் உள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்ஸ் அணி ஹைதராபாத்திடம் தோற்றதால் பிளே ஓப் வாய்ப்பை இழந்து வெளியேற்றப்பட்டது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஏற்கனவே வெளியேற்றப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவமனையில் பீலே

கால்பந்து ஜாம்பவானான பிரேஸில் கால்பந்தாட்ட அணியின் முன்னாள் அணித் தலைவரான 74 வயதான பீலே சிறுநீர் தொற்று நோய் பாதிப்புக்குள்ளாகியுள்ளார். மேற்படி நோய் தாக்கத்திணை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்திக்கொள்வதற்காக கடந்த வியாழக்கிழமையன்று அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு சிறுநீரகத்தில் கல் அடைப்பு ஏற்பட்டதற்காக சிகிச்சை மேற்கொண்டார். சிறு நீரக கற்கள் அகற்றப்பட்டபின் வைத்தியசாலையில் சிறுநீர் நோய்த்தொற்று தொடர்பாக சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்காக சாவோ பவுலோவில் உள்ள அல்பர்ட் ஐன்ஸ்டீன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தத் தகவலை குறித்த வைத்தியசாலை உறுதிப்படுத்தியுள்ளதுடன், அவருடைய உடல் நிலை மற்றும் சிகிச்சை குறித்த தகவலை வெளியிட மறுத்துவிட்டது.

## சிறந்த களம்

இளம் வீரர்களுக்கு ஐ.பி.எல். ருவெண்ரி-20 கிரிக்கெட் தொடர் சிறந்த களம். இதனை உரிய முறையில் பயன்படுத்தி தேசிய அணியில் இடம் பிடிக்க முயற்சிக்க வேண்டும். மற்றும் கிரிக்கெட் தொடர்பான நுணுக்கங்களை வெளிநாட்டு வீரர்களிடம் கற்றுக் கொள்வதற்கன களமாகவும் அது அமைந்திருப்பது விசேட அம்சம். இந்த வாய்ப்பு எங்கள் காலத்தில் இருக்கவில்லை என சென்னை அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

# துஷ்யந்தன் துல்லியமான பந்துவீச்சு

## கனகரத்தினம் மத்திய ம.வி. பழைய மாணவர் அணி பெருவெற்றி

(யாழ்ப்பாணம்)

துஷ்யந்தனின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் அணி 88 ஓட்டங்களால் பெருவெற்றிபெற்றது.

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெறும் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெறும் இரு பாடசாலைகளின் பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி நேற்று கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் அணி கஜதீபன், சத்தியபிரகாஸ் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 34.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜதீபன் 63 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள் அடங்கலாக 67, சத்தியபிரகாஷ் 30 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 30, ரஜினிகாந் 18 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வினோத் 33 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, பிரதீபன் 43 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 190 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி பழைய மாணவர் அணி துஷ்யந்தனின் துல்லியமான பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் மளமளவென விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இருப்பினும் நிசாந் ஒரு முனையில் நிதானமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றபோதிலும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. நிறைவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் அணி 26.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிசாந் 35 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 34, விஜி 30 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துஷ்யந்தன் 25 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, வசிகரன் 28 ஓட்டங்களைக்கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 88 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக பந்து வீச்சில் ஜொலித்த துஷ்யந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

# சமநிலையில் நண்பர்களின் போர்

(யாழ்ப்பாணம்)

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கும், முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்ற மூன்றாவது இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது.

முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டத்தின் உறவுப் பாலத்தை வலுவாக்கும் வகையில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் மற்றும் முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிகளுக்கிடையில் ஆரம்பிக்கப்பட்ட நண்பர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் தொடரின் மூன்றாவது ஆட்டம் கடந்த 9,10ஆம் திகதிகளில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி கலைச்செல்வன், விதுன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலைச்செல்வன் 67, விதுன் 30, சுஜிகரன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஞ்சயன் ஐந்து, தயாணன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி வினோசன், அருணன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் ஸ்திரமான நிலையை அடைந்தது. வினோசன், அருணன் ஆகியோருக்கு சதமடிக்கும் வாய்ப்பு இருந்த போதிலும் அந்த வாய்ப்பை இருவரும் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். இறுதியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வினோசன் 87, அருணன் 84, தயாணன் 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதுசன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

62 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வேகமாக ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முனைந்தது. இருப்பினும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியினால் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரிக்கப்பட ஓட்டங்களை பெற்றுக் கொள்வதை தவிர்த்துக்கொண்டதுடன் விக்கெட் சரிவையும் தடுத்துக் கொண்டது. கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இதன் மூலம் மூன்றாவது நண்பர்களின் போர் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக வித்தியானந்தாக் கல்லூரியின் வினோசன், சிறந்த துடுப்பாட்டவீரராக வித்தியானந்தாக் கல்லூரியின் அருணன், சிறந்த பந்து வீச்சாளராக வித்தியானந்தாக் கல்லூரியின் அஞ்சயன், சிறந்த களத்தடுப்பாளராக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வீரர் விஸ்ணுகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் இளங்கோ தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராஜா, யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் சிவலிங்கம் ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

மற்றும் இரு பாடசாலைகளின் பயிற்றுநர்கள், பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## வலய மட்ட மெய்வல்லுநர் வட்டுக்கோட்டையில்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று முதல் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் வீர,வீராங்கனைகள் பங்கு பற்றி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருவதுடன், பாடசாலைகளுக்கும் புள்ளிகளைப் பெற்று வருகின்றனர்.

இப்போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## இறுதியில் ஆவரங்கால் இந்து, மத்தி


ஆவரங்கால் மத்தி


ஆவரங்கால் இந்து

(சிறுப்பிட்டி)

சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக் கழகம் நடாத்தி வரும் மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு ஆவரங்கால் இந்து இளைஞர், ஆவரங்கால் மத்தி அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அனுசரணையுடன் சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடர் சிறுப்பிட்டி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதன் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், சண்டிலிப்பாய் அணியும் மோதின. இதில் முதல் செட்டை 25-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் சண்டிலிப்பாய் அணி கைப்பற்றி ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு அதிர்ச்சி அளித்தது. அடுத்த சுற்றுக்களிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை வீழ்த்தும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி எழுச்சி பெற்று புள்ளிகளை வேகமாகப் பெற்றவண்ண மிருந்தது. இரண்டாவது செட்டில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது. தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அடுத்தடுத்து இரு செட்களையும் 25-15, 25-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றதுடன் 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் மத்தி அணி அடுத்தடுத்து செட்களைக் கைப்பற்றி புத்தூர் கலைமதி அணிக்கு அதிர்ச்சி அளித்தது. பதிலுக்கு ஒரு செட்டையாவது கைப்பற்ற வேண்டும் என்ற வெறியுடன் விளையாடிய புத்தூர் கலைமதி அணியால் இறுதி வரை செட் எதனையும் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை. நிறைவில் ஆவரங்கால் மத்தி அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், சிறந்த வீரர், தொடர் நாயகன் விருது போன்ற பரிசில்களும் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## இன்றைய ஆட்டம்

((கம்பர்மலை)

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இரு ஆட்டங்கள் இன்று இரவு நடைபெறவுள்ளன.


இதில் முதலாவது போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் எதிர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் மோதவுள்ள அதேவேளை இரண்டாவது போட்டியில் பருத்தித்துறை கொலின்ஸ் எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் மோதவுள்ளன.

மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் பல அணிகள் இத்தொடரில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)


கிளிநொச்சி ஆனந்தபுரம் கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த ஏழாம் திகதி நடைபெற்றவேளை...

# ஆய்வுப் பொருளாக சண்ணரது அரங்கப் பணிகள்

ஈழத்துத் தமிழ் நவீன அரங்க வரலாற்றில் மட்டுமன்றி ஆசியச் சூழலிலே முன்மாதிரியானதாகவும் முதன்மைக் கவனிப்பிற்குரிய விடயங்களுள் ஒன்றாகவும் விளங்கும் கல்வியியல் அரங்கச் செயற்பாட்டுப் பின்புலத்தில்



குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் மீட்டிப் பார்ப்பதும் அதனூடாக ஈழத்தமிழர்களது சமகால அரங்க இயங்கியலை மதிப்பீடு செய்துகொள்வதும் இக்குறிப்பின் நோக்கமாகின்றது.

அரங்க நுட்பங்களும் சமூக விமர்சனங்களும் படைப்பாக்கத் திறன்களும் ஒன்றிணைந்த வகையில் பயில்வதற்கான அரங்கத் தேடல்களின் ஊடாக விளைந்த அரங்க முறைமைகளில் ஒன்றாகவே ஈழத்தமிழர்களது கல்வியியல் அரங்கு அமைகின்றது.

உண்மையில் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் கலைத்துறை ஒன்று கல்வித்துறையாகி அதிவேக பரவலாக்கத்தையும் பெற்றுள்ளதென்றால் அது அரங்கத் துறைக்கே பொருத்தமுடையதாகின்றது.

பாடசாலைகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான பாட நெறிகளுள் ஒன்றாக மட்டும் அரங்கு இருந்த நிலை மாறி ஆரம்ப, இடைநிலை வகுப்பினர்களுக்கான அழகியல் பாட நெறிகளுள் முக்கியமானதாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பிற்குரிய முக்கிய துறைகளுள் ஒன்றாகவுள்ள அரங்கியலை பட்டப்பின் படிப்பு, உயர்கல்வி நடவடிக்கைகளுக்கான துறையாக தெரிவு செய்வதில் பலரும் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு கற்கை நெறியாக அரங்கு விரிவடைந்துள்ளமையால் இக்கலை வடிவத்தின் மீது ஆர்வமுள்ளவர்கள் இதில் தேர்ச்சி பெறுவதற்கான தளம் உருவாக்கப் பட்டுள்ளதோடு இப்படிப்பட்டவர்கள் தொழில் முறையாளர்களாக ஆவதற்கான சந்தர்ப்பங்களும் உருவாகியுள்ளன.

இந்நிலையில், இக்கல்விமுறை பற்றிய விவாதங்களையும் விமர்சனங்களையும் வெகுசனமயப்படுத்துவதோடு மாற்றுக்கல்வி முறையாக தொழிற்படவும் செய்கின்ற ஈழத்தமிழர்களது கல்வியியல் அரங்கப் போக்கு மிகுந்த கவனிப்பைப் பெறுகின்றது.

அறிவூட்டி மகிழ்வைத் தருதல் கல்வியின் பணி, மகிழ்வூட்டி அறிவைத் தருதல் அரங்கின் பணி. கல்விக்கும் அரங்கிற்குமிடையே காணப்படும் ஒற்றுமையும் வேற்றுமையும் இதுவே.

செய்து கற்றல் செய்து பிழைவிட்டு திரும்பச் செய்து கற்றல் கூடிக் கற்றல் கலந்துரையாடிக் கற்றல் சவால்களை எதிர் கொண்டு பிரச்சினைகளை விடுவிக்கவும் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டுக் கொள்ளவும் கற்றல், தலைமைக்குப் பணியக் கற்று தலைமை தாங்கக் கற்றுக்கொள்ளுதல், பொது நலனுக்காக் கூடி உழைக்கும்போது சுய நலத்தை முன்னிறுத்தாதிருக்கக் கற்றல் என இவை யாவும் கல்வியினதும் அரங்கச் செய்வினைகளதும் விளை பயன்களாகும். இதனால்தான் கல்விச் செயற்பாடுகளில் அரங்கச் செயற்பாடுகளின் அவசியம் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

கல்வியியல் அரங்கின் கோட்பாடுகளாய் விரியும் சண்ணரது மேற்படி பகிர்வு "செய்வதனூடாகக் கற்றல்" எனும் கல்வியியல் அரங்கின் அடிப்படையினை வலியுறுத்துவதும் வலுப்படுத்துவதுமான செயற்பாடுகளினூடு முகிழ்த்தவை.

ஈழத்தமிழர் மத்தியில் நடைமுறையிலுள்ள கல்வியியல், அரங்கவியல், கல்வியியல் அரங்கு, வாழ்வியல் குறித்த காத்திரமான மதிப்பீடுகளை நிகழ்த்தவும், சவால்களை எதிர்கொண்டு சாத்தியப்பாடுகளுக்காய் கூடிக் கருமமாற்ற வழிப்படுத்தவும் கூடிய செயல்நிலை அனுபவங்கள் பல நம் மத்தியில் காத்துக் கிடக்கின்றன. அவை அரங்கை காத்திரமானதொரு கல்வித் துறையாகவும் கலைவடிவமாகவும் வாழ்க்கை முறையாகவும் கையாள்வதற்கான ஆதாரங்களாக உள்ளன. இவ் உண்மையைப் புரிந்துகொள்ள சண்ணரது கீழ்வரும் அனுபவப் பகிர்வு போதுமானது.

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறுகளிலிருந்து கல்வியியல் அரங்கு என்பது பல்வேறு புதிய பாதைகளிலும் செல்ல ஆரம்பித்தது. நாடகக்காரர், ஆசிரியர், மாணவர் என்ற கூட்டு முயற்சியுடன் காத்திரமான சில ஆற்றுகை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அத்தகைய ஒத்துழைப்புக்கள் எல்லாத் தயாரிப்புகளிலும் தொடர்ந்து இடம்பெற்றன எனக் கூற முடியாது. மனித ஒழுக்கமே இதற்குக் காரணம் என்று மட்டுமே கூறமுடியும்.

இனமோதல், உள்நாட்டு யுத்தம் என வளர்ச்சியுற்றதன் பேறாக பல அவலங்கள் மலியத் தொடங்கின. யுத்தத்தால் விளைந்த அவலங்களை அனுபவித்து வரும் பலருக்கு நம்பிக்கையையும் விழிப்பினையும் ஊட்ட வேண்டிய பொறுப்பு அரங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தம் கடமையாகவும் அமைந்தன.

நெருக்கீடுகளின் மத்தியில் வாழும் சின்னஞ் சிறுவர் மத்தியில், சிறுவர் பெருமளவில் பங்கு கொள்ளக்கூடிய முறையில் அமையும் சிறுவர் அரங்க நடவடிக்கைகளின் அவசியம் மேலும் உணரப்பட்டது.

மறுபுறம் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் சமுதாய மட்டத்தில் பல்வேறு நிலைகளிலும் கல்வியியலாக அரங்கு பயன்படுத்தப்பட்டு வரும் போதிலும் எவரும் ஏதாவதொன்றில் விசேட கவனம் செலுத்தும் நிலை இன்னமும் இங்கு ஏற்படவில்லை. அரங்கு தொழில் முறை அரங்காகவும் வளரவில்லை.

பிள்ளைகளை கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்து விடுகிறோம் எனக் கருதிக் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்தவே முடியாத அளவுக்கு விடுவித்துவிட்டு அவர்கள் சமூகத்தோடு ஒட்டமுடியாத அளவுக்கு விடுதலையாகி விடுவதால் மக்கள் மத்தியில் புதிய சிக்கல்கள் எழுகின்றன. சூழலின் யதார்த்த நிலைமையைக் கருத்திற்கொள்ளாது விதேசியச் சூழல்களில் பெற்றுக்கொள்ளப் பட்ட அனுபவங்களை இங்கு புகுத்த முற்படுவதாலேயே இந்த நிலைமை எழுகிறது.

இன்று உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களே மூன்றாம் உலக நாடுகளின் மக்களுக்காகச் சிந்திக்கின்ற பொறுப்பினை ஏற்றுள்ளன. திட்டங்கள் தயாரிப்பதும் அவற்றுக்கான பெரு நிதிகளைப் பெற்றுக் கொள்வதும் ஒரு கலையாக வளர்ந்துவிட்டது. இதனால் பலரது சுயசிந்தனையும் கொள்கைப் பிடிப்பும் பணத்துக்கு விலைபோய்விடுகின்றன.

அதிகாரமும் மிதமிஞ்சிய அதிகாரமும் மட்டுமல்ல, பணமும் மிதமிஞ்சிய பணமும் மனிதரைக் கெடுக்கும், மிதமிஞ்சிக் கெடுக்கும். கல்வியியல் அரங்க முயற்சிகள் பலவும்கூட இதற்கு விதிவிலக்கல்ல.

கல்வியியல் அரங்கு என்பது மிகப் பரந்ததொரு பரப்பினுள் கிளைவிரித்து விழுதுவிட்டு நிற்கும் ஒரு ஆலமரம் போன்றது. அது பல வடிவங்களிலும் பல முறைமைகளிலும் பல மோடிகளிலும் மேற்கொள்ளப் படுகிறது. அவை அனைத்துமே மேற்கொள்ளப்பட வேண்டியவைதான்- சில வேண்டத்தகாத தீவிரங்களைத் தவிர. ஆனால் அரங்கு ஒரு கலை வடிவம், கலைச்சாதனை என்ற வகையில் நின்று நிலைத்து வளர்வதும் மிக அவசியமான ஒன்றாகும். அரங்க அழகியலை நயக்கும் வாய்ப்பினையும், அந்த நயப்பின் மூலம் வரும் அனுபவத்தைப் பெறும் உரிமையினையும் நாம் அனைவருக்கும் தொடர்ந்து வழங்கிவர வேண்டும். அப்பொழுதுதான் அழகிய மனங்களைக் கொண்டதொரு மக்கள் சமூகம் வளரும்.

- த. விவேகானந்தராசா -


# இசை அதிசயம் நாகூர் ஏ.எம்.ஹனீபா

அண்மையில் காலமான இசை முரசு ஈ.எம். ஹனீ:.பாவின் குரல் வேறு யாராலும் பின்பற்ற முடியாத தனித்துவம் கொண்டது. அந்த வகையில் unique-ஆன பாடகர் அவர். ஹிந்திப் பாடகர் கிஷோர் குமாரின் குரலும் தனித்துவமானதுதான் என்றாலும் அவருடைய பாணியில் அவருக்கு முன்னதாக கே.எல். செய்கல் இருந்திருக்கிறார். இதை கிஷோர் குமாரே குறிப்பிட்டும் இருக்கிறார். கிஷோரைப் போல் யாரேனும் பாடி விடவும் கூடும். ஆனால் ஹனீ:.பாவைப் போல் பாட அவரை விட்டால் வேறு யாருமே இல்லை. உலகிலேயே அவர் மட்டும்தான். இது பற்றி ஹனீ:.பா, "இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? கோடிக் கணக்கான மனிதர்கள் பிறந்து கொண்டு இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி முகம் இருக்கிறதுதானே? ஒருவரைப் போல் இன்னொருவர் இல்லையே?" என்கிறார்.

தொடர்ந்து சொல்லும் போது, "என்னைப் போல் என் குரலில் பல இளைஞர்கள் பாடுவதைக் கேட்கிறேன். ஆனால் இரண்டு பாட்டுகளுக்கு மேல் அவர்களின் குரல் வேறு மாதிரி ஆகி விடுகிறது" என்கிறார். உண்மைதான். ஒலிபெருக்கி இல்லாமலேயே பல காத தூரம் கேட்கும் அளவுக்கு கனத்த குரல் ஹனீ:.பாவினுடையது. அதே சமயம் தேனினும் இனிமையானது. இதையெல்லாம் விடப் பெரிய விஷயம், நான்கு ஐந்து மணி நேரத்துக்கு இடைவிடாமல் மழை போல் பொழியும் இசைக் கலைஞன் ஹனீ:.பா. வேறு யாராலும் இவ்வளவு high pitch குரலில் நான்கு ஐந்து மணி நேரம் பாடுவதை யோசித்தும் பார்க்க முடியாது. அதிலும் பல பாடல்களில் சுவாசத்தில் இடைவெளியே கொடுக்காமல் பாடிக் கொண்டே போவார்.

உதாரணமாக, "திக்குத் திகந்தமும் கொண்டாடியே" என்ற பனிரண்டு நிமிடப் பாடலில் முதல் ஆறு நிமிடம் ஹனீ:.பாவின் குரல் இசையும் இறைமையும் கலந்து நிற்கும் உன்னத வெளிக்கு நம்மை அழைத்துச் செல்லும். ஆறு நிமிடம் கழிந்த பிறகே "உம்மை ஒரு போதும் நான் மறவேன் மீரா" என்ற அற்புதப் பாடல் நிகழும். இந்தப் பாடலைக் கேட்டு கண்ணீர் விடாத மனிதரே இல்லை.

கந்தூரியின் போதும் மற்ற விசேஷங்களிலும் ஹனீ:.பாவின் கச்சேரி இரவு முழுவதும் நடைபெறும். அவரது பாடல்கள் மதம், இனம் போன்ற பாகுபாடுகளைக் கடந்தவை என்றாலும் பல பாடல்கள் இஸ்லாமிய அறக் கோட்பாடுகளையும் வாழ்வியல் நெறிகளையும் விளக்குபவையாக இருக்கும். உ-ம். "அதிகாலை நேரம் சுபுஹுக்குப் பின்னே அண்ணல் நபி வரும் போது இன்னல் செய்தாள் ஒரு மாது" என்ற பாடல் நபிகள் நாயகத்தின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வை விளக்குகிறது. இன்னா செய்தாரை ஒறுத்தல். அவர் நாண நன்னயம் செய்து விடல் என்ற குறளை நினைவூட்டும் சம்பவம் அது. இது போல் எண்ணற்ற ஹதீஸ்களைப் பாடலாகப் பாடியிருக்கிறார் ஹனீ:.பா. நெஞ்சம் உருகுதம்மா என்ற பாடலில் தீனோர்களின் தியாக வரலாற்றைச் சொல்லுவார். "ஐந்தாயிரம் ஆண்டுகள் முன்பே நடந்தது அரபு நாட்டிலே ஓர் தியாகம்" என்ற ஒரு பாடல். இடது காதை இடது கையால் பிடித்தபடி ஹனீ:.பாவின் தனி முத்திரையான "ஓ" என்று இழையும் குரலை இந்தப் பாடலில் கேட்கலாம்.



இந்தியாவின் சூ:.பி பரம்பரையில் வந்த மாபெரும் இசைக் கலைஞனான ஈ.எம். ஹனீ:.பா நவீன இசைக் கருவிகள் பழக்கத்துக்கு வரும் முன்பே நான்கே நான்கு கருவிகளோடு - தப்லா, ஹார்மோனியம், ஷெனாய், டேப் (:.பக்கீர்கள் பயன்படுத்தும் இசைக்கருவி) - நான்கைந்து மணி நேரம் கச்சேரி செய்தவர். நாடே

# நடிகர்களைக் கவர்ந்த புதிய தொழில்நுட்பம்




**பே**ஸ்புக், டுவிட்டர், வாட்ஸ் அப், வைபர், இன்ஸ்டோகிராம் என பெருகி வரும் தொலைத் தொடர்புகளின் வளர்ச்சி விகிதம் சினிமா உலகினரை ஆட்டிப் படைக்கிறது. இந்த வரிசையில் புதிதாக சேர்ந்திருக்கிறது டப்ஸ் மாஷ் என்கிற புதிய வசதி. இதன் மூலம் தற்கால நடிகர்களிலிருந்து தியாகராஜ பாகவதர் காலத்து நடிகர்கள் வரை பேசிய வசனங்களை தமது முக பாவங்களுடன் பேசி நடித்து வெளியிடலாம். இந்த முறை கோலிவுட் வட்டாரங்களில் வேகமாகப் பரவி வருகிறது. இளம் நடிகர், நடிகைகள் வசனங்களைப் பேசி அப்லோட் செய்து வருகின்றனர். ரஜினியின் "அதிகமாக ஆசைப்படுற ஆம்பளயும், அதிகமா கோபப்படுற பொம்பளயும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே இல்லை" என்ற வசனத்தை சிம்பு தனது முகபாவத்தில் பேசி நடித்திருக்கிறார். அதே போல் "துப்பாக்கி" படத்தில் வரும் "ஐ யம் வெயிட்டிங்..." வசனத்தை அனிருத்தும், "நான் அடிச்சா ஒன்றரை டன் வெயிட்டுடா..." வசனத்தை பிரேம்ஜியும் பேசி பதிவு செய்துள்ளனர். இந்த வீடியோக்கள் பல தரப்பிலும் வரவேற்பைப் பெற்றுள்ளதால் இமான், விஷால், ராதிகா, சூரி ஆகியோரும் தங்களுக்குப் பிடித்த வசனங்களைப் பேசி உணர்ச்சி பொங்க நடித்து வெளியிட்ட வண்ணம் உள்ளனர். தனக்குப் பிடிக்காதவர்களை மறைமுகமாகத் தாக்க சினிமாவில் அதற்கான வசனங்களை வைத்து சாடுவது வழக்கமாகி இருந்து வந்தது. இந்த வசதியால் தற்போது உடனுக்குடன் சக நடிகர்களைத் தாக்கிக் கொள்ளும் போக்கு உருவாகியுள்ளது.

# உன்னதங்களைக் காண உங்களது கண்கள் பழகட்டும்

**நா**ம் நம் கண்களால் மோசமானவற்றைப் பார்க்காமல் இருந்தால் மட்டும் போதுமா? இல்லை. சரியாக நோக்கக் கற்றுக்கொண்டால் ஒருவன் பார்ப்பதெல்லாம் அதிசயங்களும் ஆச்சரியங்களுமே.

கேரளாவில் ஒரு கடற்கரை. அங்கு ஒரு கயிறு வியாபாரி கயிற்றைத் திரித்து, கடலில் நீரில் ஆழ்த்தி வைத்துப் பின் காய வைப்பார். பின் அந்தக் கயிற்றை ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்வார்.



ஒருமுறை ஈரமான கயிற்றில் மணல் ஒட்டி இருக்கும்போதே ஏற்றுமதி செய்துவிட்டார். இதனால் ஜேர்மன் தொழிற்சாலையினர் வியாபாரியைக் கண்டித்துக் கடிதம் எழுதினர்.

அந்தத் தொழிற்சாலைக்கு ஒருமுறை விஞ்ஞானி ஒருவர் வந்தார். எல்லாவற்றையும் பார்த்து வந்த அவர் முடிவில் கேரளக் கயிற்றையும் மணலையும் உற்று நோக்கினார்.

அந்த மணலை ஆராய்ந்த அவர், அது சாதாரண மணலல்ல. அதில் அதிக விலை மதிப்புள்ள, அணுமின் உற்பத்திக்குப் பயன்படும் தோரியம் மிகுந்திருந்ததைக் கண்டார்.

உடனே ஜேர்மானியர்கள், "இனி நீங்கள் கயிறு அனுப்பாவிட்டாலும் பரவாயில்லை, மணலை மட்டும் அனுப்ப மறந்து விடாதீர்கள்!" என்றார்களாம் இந்திய வியாபாரியிடம்!

இதுபோல் எதைப் பார்த்தாலும் அதிலுள்ள உன்னதங்களைக் காண உங்களது கண்கள் பழகட்டும்.

கொல்கத்தாவில் பல விலைமகளிர் இருந்தனர். அவர்களுள் ஒருத்தி ஸ்ரீராமகிருஷ்ணரிடம் சென்றபோது, "தாயே! லோகமாதா! இன்று நீ இந்த உருவில் வந்துள்ளாயா?ஷ என்று கைகூப்பி வணங்கினார் அவர்!

பெண்களைப் பிறர் போகப் பொருளாகப் பார்த்தனர் ராமகிருஷ்ணரோ பரம்பொருளாகவே பார்த்தார்.

("எழுச்சி பெறு யுவனே" என்ற நூலில் விமூர்த்தானந்தர்)

கொண்டாட வேண்டிய இந்த இசைக் கலைஞனின் மீது சினிமாவின் நிழல் படாத காரணத்தால் அவரது மரணம் கவனிக்கப்படாமல் போயிற்று என்றுதான் சொல்ல வேண்டும். குலேபகாவலி, பாவ மன்னிப்பு பின்னர் செம்பருத்தி போன்ற இரண்டு மூன்று படங்களில் தான் பாடினார்.


ஹனீ∴பாவின் இன்னொரு சாதனை, திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் மக்கள் இயக்கமாகத் திரண்ட ஆரம்ப காலத்திலும் சரி, அதற்குப் பிறகு ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகும் சரி, அந்தக் கட்சியை மக்களிடம் கொண்டு சென்றதில் ஹனீ∴பாவின் பங்கு மகத்தானது. கருத்து உடன்பாடு இல்லாவிட்டாலும் கூட "கல்லக்குடி கொண்ட கருணாநிதியே" என்ற பாடலைக் கேட்கும் போது நம் மனம் உருகி விடும்.

ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடியிருக்கும் இசைமுரசு ஈ.எம். ஹனீ∴பா தன்னுடைய பெரும்பான்மையான பாடல்களுக்குத் தானே இசை அமைத்தார். அவருடைய ஒரு பாடல் கூட கேட்பதற்கு அசுவாரசியமாக இருந்ததில்லை. தான் பாடிய ஒவ்வொரு பாடலையும் ஆயிரக் கணக்கான மேடைகளில் பாடினார். அதாவது, ஒவ்வொரு பாடலையும் பத்தாயிரம் இருபதாயிரம் தடவை பாடியிருப்பார். ஹனீ∴பாவுக்கு பாடல் என்பது நமக்கு சுவாசத்தைப் போல. இங்கே குறிப்பிட வேண்டிய இன்னொரு விஷயம், அவருடைய பாடல்களை இயற்றிய புலவர் ஆபிதீன் மற்றும் நாகூர் சலீம். இரண்டாமவர் ஆயிரக் கணக்கான பாடல்களை இயற்றியவர். கவிஞர் கண்ணதாசன், வாலி ஆகியோருடன் இணையாகப் பேசப்பட வேண்டிய நாகூர் சலீமும் சினிமாவின் நிழல் படியாத இடத்தில் இருந்ததால் பிரபலமா்க அறியப்படவில்லை. இந்த மகத்தான கலைஞர்களை இந்தத் தருணத்திலாவது நாம் நினைவு கூருவோம். அதன் பொருள், காலத்தால் அழியாத அவர்களின் பாடல்களைக் கேட்டு இன்புறுவோம்.

ஏ.ஆர். ரஹ்மான் ஒருமுறை ஈ.எம். ஹனீ∴பாவின் பாடல்களை ஒன்று திரட்டி டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் தொகுக்க வேண்டும் என்று சொன்னார். எப்போது அதைச் செயற்படுத்துவார் என்று காத்திருப்போம்.

# பெண்கள் கேவலமானவர்களா? முதல்வர் விக்கியின் ஆபாசப் பேச்சு!

- தமிழ்ப்பிரியை -



**மு**தலமைச்சர் விக்னேஸ்வரன் பிரேமானந்தாவின் நீண்டகால சீடர் ஆவார். இதனை அவரே சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்தியிருக்கிறார். அதை அவர் மறுக்கவும் இல்லை மறைக்கவும் இல்லை. விக்னேஸ்வரன் தேர்தலில் போட்டியிட்டபோது ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தன்னை உணரவைத்தவர் பிரேமானந்தா என குறிப்பிட்டுள்ளார்.

அடிப்படைப் பிரச்சினையான குடிநீர் பிரச்சினையை தீர்க்க முடியாமல் ஒட்டு மொத்த தமிழ் மக்களின் விமர்சனத்திற்கும் உள்ளாகியிருக்கின்றார். எத்தனையோ போராளிகளின் தியாகத்திலும், அர்ப்பணிப்பிலும் தமிழ் மக்களுக்கு கிடைத்த 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணசபையை சரியான வகையில் நிர்வகிக்க முடியாது சேடம் இழுக்கும் அளவிற்கு இழுத்துச் செல்வது தமிழ் மக்களின் சாபக்கேடாக அமைகின்றது.

ஆச்சிரமத்தில் கொலைகளில் ஈடுபட்டவர்களும் பாலியல் சேஷ்டைகளில் ஈடுபட்டவர்களும் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இவ் ஆசாமிகளை விடுதலை செய்யுமாறு இந்திய பிரதமருக்கு எழுதிய கடிதம் மக்களை - தமிழ் மக்களை தலை குனிய வைத்துள்ளது.

இவருக்கு என்ன புத்தியா கெட்டுப் போச்சுது? இவரது இந்தச் செயல் ஒட்டுமொத்த தமிழ் மக்களை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

இவருடைய இன்றைய ஆதங்கம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் பற்றியதல்ல. தற்போது சிறையில் வாடும் பிரேமானந்தாவின் சகபாடிகள் மீண்டும் வெளியே வர வேண்டும். ஆச்சிர சொத்துக்களை பராமரிக்க ஆள் தேவை என்பதே முதலமைச்சருக்கு இருக்கும் முக்கிய பிரச்சினையாம்.

வடமாகாணத்திற்கு அது செய்வோம் இது செய்வோம் என்று பொய் வாக்குறுதி கொடுத்து மக்களை ஏமாற்றி அரியணை ஏறியவர்கள் தமிழ்மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுத்தார்கள். மக்களுக்கு நன்மை பயக்கும் நியதிச் சட்டங்களை ஆக்குகின்றார்களா...? இல்லவே இல்லை வெறும் பிரேரணைகள் மாத்திரம் வடமாகாண சபையில் அடுக்கப்படுகின்றன.

வடக்கின் முதலமைச்சராக உள்ள விக்னேஸ்வரன் எதற்கு எடுத்தாலும் பெண்களை கேவலப்படுத்தும் உதாரணங்களை கூறுவது கண்டிக்கப்பட வேண்டியது.

அவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டதிலிருந்து இன்று பூதாகரமாக உருவெடுத்துள்ள குடிநீர் பிரச்சினை வரை பெண்களை கேவலப்படுத்தும் உதாரணங்களை கூறுவதே அவரது வழமையான ஆண்நிலை மேலாதிக்க போக்கினை காட்டுகின்றது.


பெண்களின் வளர்ச்சி அபரிதமான போக்கிலே செல்லும் இக்கால கட்டத்தில் - சட்டத்துறை, விமான ஓட்டுனர், மருத்துவத்துறை, அரசியல் துறை, பொறியியல் துறை, நீதிச்சேவைகள், இராணுவத்துறை... போன்ற இன்னோரன்ன துறைகளில் எல்லாம் தமது சாதனைகளை நிலைநாட்டி வரும் இக்கால கட்டத்தில் இவர் பெண்களை இழிவுபடுத்தும் உரைகளை ஆற்றுகின்றார்.

முக்கிய அரசியல் தலைவர் ஒருவர் எதற்கெடுத்தாலும் பெண்களை இழிவுபடுத்தும் உதாரணங்களையும் ஒப்பீடுகளையும் வைத்து உரையாற்றினால் பெண்கள் எப்படி சமூகத்தில் மதிக்கப்படுவார்கள். மேல்நிலையடைவார்கள்.

கடந்த 12.04.2015 அன்று குடிநீர் பிரச்சினை சம்பந்தமாக ஆளுநர் அரசஅதிகாரிகள் சகிதம் நடந்த கூட்டத்தில் முதலமைச்சர் பெண்கள் எதிர்மறைவான விளைவுகளை ஏற்படுத்துபவர்கள் என்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு தர முடியாதவர்கள் என்றும் குடிநீர் பிரச்சினையுடன் சம்பந்தமேயில்லாமல் கரப்பொத்தான் கதையொன்றை பின்வருமாறு கூறுகின்றார்..

"கரப்பொத்தான் ஒன்று சிற்றுண்டிச்சாலையில் இருந்தது. அது ஒரு பெண்ணின் மேலேயிருந்தது. பெண் வீறிட்டுக் கத்தி மற்றவர்களை பயமுறுத்தினர். பின்பு அப் பெண் கரப்பொத்தானை தட்டிவிட மற்றையொரு பெண்ணின் மேல் இருந்தது அவரும் வீறிட்டுக் கத்தினார். இதனை கண்ட சிற்றுண்டி உதவியாளரான ஆணொருவர் அவ்விடத்திற்கு விரைந்து வந்து கரப்பொத்தானை தட்டிவிட அது அவரிலேயே இருந்தது. கரப்பொத்தானின் நடத்தையினை அறிந்து கொண்டு கரப்பொத்தானை கையில்பிடித்து சிற்றுண்டிச்சாலைக்கு வெளியே எறிந்தார்" இதன்மூலம் ஆண்கள் பிரச்சினையை விளங்கி தீர்ப்பவர்கள் எனவும் பெண்கள் பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் எனவும் பெண்களை இழிவுபடுத்தும் கதையொன்றினை அக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.


இவர் உருவாகியதும் ஒரு பெண்ணின் கருப்பையிலிருந்து தான், தன் பரம்பரையை உருவாக்கியதும் ஒரு பெண்ணினால் தான், இவருக்கு பெண் குழந்தைகள் இருந்தும் பெண்ணின் அருமையினை உணராமல் எல்லோருக்கும் இழுக்கை தேடித் தந்து கொண்டிருக்கின்றார் விக்கி. இதேவேளை பெண்களைச் சீரழித்த பிரேமனந்தாவின் சீடராக இருப்பதால் தான் பெண்களை இழிவுபடுத்தும் கருத்துக்களைப் பரப்பி வருகின்றாரோ என ஐயுறவு கொள்ளவேண்டியுள்ளது.





# நிகழ்வுகளின் பதிவுகள்....

கொழும்பு கம்பன் கழகம் நடாத்திய கம்பன் விழா 2015 இல் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்திற்கு "ஊர்மகிழ உழைத்த மகன்" எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதைக்காணலாம். (25)







தாவடி வட பத்திர காளி அம்மன் ஆலய தேர் உற்சவம் அண்மையில் இடம் பெற்றபோது சுவாமி தேருக்கு எழுந் தருளுவதையும், புதிய சித்திரத்தேர் வீதி வலம் வருவதையும் காணலாம். (137)

புலோலி கந்த முரு கேசனார் முன்பள்ளியின் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய முறைசாராக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி வி.இராசகுமாரன் உரையாற்றுவதையும் அங்கு இடம்பெற்ற சிறார்களின் கலை நிகழ்வினையும் காணலாம். (01)










மேலைப்புலோலி சிவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வசதிகுறைந்தவர்களுக்கான இலவச வைத்திய முகாமொன்றை வித்தியாலயத்தில் நடாத்தியது இவ் இலவச வைத்திய முகாமில் வைத்தியகலாநிதி எஸ். ரகுநாதன் பல் வைத்திய நிபுணர் எஸ். மகாலிங்கம் ஆகியோர் வைத்திய சேவைகளை வழங்குவதைக்காணலாம். (01)





சுழிபுரம் பாரதி கலை மன்றத்தில் சர்வதேச மகளிர் தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்ட போது..!



வலி. மேற்கு பிரதேச சபையில் சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு வலி. மேற்கிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழ் பண்பாட்டின் அடிப்படையிலான கைவிசேசம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது இந்நிகழ்வில் வலி-மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் மற்றும் கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் ஆகியோர் கலந்து சிறப்பித்து ஆசிரியர்களுக்கு கைவிசேடம் வழங்கி வைப்பதைக் காணலாம்.

## துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ்

# வலி.தென்மேற்கில் 14 வீதிகள் புனரமைப்பு

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வகையில் துரித அபிவிருத்தி, திட்டத்தின் கீழ் 14 வீதிகள் மற்றும் உட்கட்டுமானங்கள் இவ்வாண்டு மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ள கீழ்வரும் 14 வீதிகளின் அபிவிருத்தியின் போது அந்தந்த பிரதேச மக்கள், பொது அமைப்புக்கள் பூரண பங்களிப்பினை வழங்கி உதவ வேண்டும் என மானிப்பாய் பிரதேசசபைத் தவிசாளர் சி.சி.மகேந்திரன் கேட்டுள்ளார்.

2015 இல் துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புனரமைப்பு மற்றும் உட்கட்டுமானங்கள் செய்யப்படவுள்ள வீதிகளின் விபரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வருமாறு:

சுதுமலை தெற்கு சென்ற் ஆன்ஸ் வீதி ஜே-130, உயரப்புலம் கராஜ் வீதி ஜே-132, நவாலி தெற்கு கொத்துக்கட்டி வீதி ஜே- 136, மானிப்பாய் வடக்கு செக்காலை வீதி ஜே-137, மானிப்பாய் கிழக்கு தோட்ட வீதி ஜே-138, மானிப்பாய் தெற்கு அட்டகிரி வீதி ஜே-139, கட்டுடை விநாயகர் முன்பள்ளி மலசல கூடம் புனரமைப்பு ஜே-140, சண்டிலிப்பாய் வடக்கு விவசாய வீதி ஜே-141, சண்டிலிப்பாய் மத்தி வீரபத்திரர் கோவில் வீதி ஜே-142, சண்டிலிப்பாய் மேற்கு பேக்கரி வீதி ஜே-143, பெரியவிளான் சிறுவிளான் சனசமூக நிலைய வீதி ஜே-153, மாரிசன் கூடல் உயரப்புலம் வீதி ஜே-154, இளவாலை போயிட்டி மீன்பிடிவாடி புனரமைப்பு ஜே-155என்பனவாகும். (92)

# வீதியைப் புனரமைக்க கோரிக்கை


சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பழுதனை வீதி மக்கள் பயன்படுத்த முடியாதளவு குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் அதனைப்புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி வீதி கொடிகாமம் பருத்தித்துறை வீதிக்கு கிழக்குப் புறமாக காணப்படுகிறது

இது மக்கள் பாவிக்க முடியாத அளவு மிக மோசமாகக் காணப்படுவதால் இவ் வீதியினைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியை புனரமைப்பதற்கு உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என இவ் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் கோரியுள்ளனர். (150)

# சிறப்புற நடைபெற்ற ஆண்டுவிழா



வட்டுக்கோட்டை சங்கரத்தை இரத்தினசிங்கம் மணிமண்டபத்தின் ஆண்டுவிழா நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ம.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

"சிறுவர்களின் திறன் விருத்தியில் கிராம நிறுவனங்களின் பங்களிப்பு" என்ற பொருளில் சொல்லருவி லலீசனின் சிறப்புரை இடம்பெற்றது.

மணி மண்டபத்தின் நிறுவுநர் இ.பாலகிருஷ்ணனின் வாழ்த்துரை சங்கரத்தை முருகமூர்த்தி கோவில் பிரதம குரு பா.சதாசிவக்குருக்களின் ஆசியுரை என்பனவும், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன், வட்டு. மத்திய கல்லூரி அதிபர் ந.சபாரத்தினசிங்கி, சங்கரத்தை சின்னம்மா வித்தியாலய அதிபர் க.சிவலோகநாத தேசிகர், சங்கரத்தை கிராம அலுவலர் எஸ்.சிவகுமார் ஆகியோரது உரைகளும் இடம்பெற்றன.

கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி ஆசிரியர் துணைவியூர் சி.கேசவன் தலைமையில் சிறுவர்கள் தம் குழந்தை பருவத்தைத் தொலைப்பதற்குப் பெரிதும் வழிவகுப்பது பெற்றோரின் பெருவிருப்பா? அல்லது கல்வி முறைகளின் விளைவா? என்ற தலைப்பில் பட்டிமண்டபமும் இடம்பெற்றது.

வட்டு. மத்திய கல்லூரி பிரதி அதிபர் பா.சண்முகம் நன்றியுரை நல்கினார்.

நிகழ்வில் பொதுப் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (48)




## வெளிவாரிப் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் தெங்கு சார்ந்த கைத்தொழிலின் தொழில்நுட்பப் பயிற்சித்திட்டத்திற்காக வெளிவாரிப் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் மத்திய அளவு மட்டத்தில் நிலவும் தெங்கு சார்ந்த உற்பத்திகளின் இயல்புத்தன்மையை உயர்த்துதல், தேசிய மற்றும் சர்வதேசரீதியில் நிலவும் தெங்கு உற்பத்திக்கான கிராக்கியை தொடர்ந்து நிறைவு செய்வதற்காக தெங்கு சார்ந்த கைத்தொழில் மற்றும் சந்தைப்படுத்தும் துறையை விரிவுபடுத்தும் நோக்கில் தெங்கு சார்ந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடவுள்ளவர்களுக்கு முறையான பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

தெங்கு உற்பத்திகள் தொடர்பாக உரிய போதனைகளை வழங்குவதற்கு அத்துறையில் அனுபவம் உள்ள நிறுவனம் அல்லது தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் வதியும் மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு அனுபவம் ஏனையவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை 2015.05.29ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் ஒழுங்கமைப்பு அபிவிருத்திப்பிரிவு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, இல.11 டியூக்வீதி, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம். (10)

## ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன்தொழிற் பயிற்சி

நாட்டிலுள்ள 18 தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2015ஆம் கல்வி ஆண்டுக்கான 32 வகையான மூன்றாண்டு கால ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன்தொழிற் பயிற்சிகளைப் பயில்வதற்கு தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கல்வியமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

25 வயதுக்குட்பட்ட 2013ஆம் ஆண்டு நடைபெற்ற தேவையான இசட் புள்ளிகளைப் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் விண்ணப்பம் தொடர்பான அனைத்து விபரங்களையும் 08.05.2015 வெளிவந்த வர்த்த மானியில் பார்வையிடலாம்.

ஒருவர் மூன்று பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் ஒருவர் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே அனுப்பலாம் விண்ணப்பமுடிவுத்திகதி 29.05.2015 ஆகும். மும்மொழியிலும் அறிவித்தல் வெளியாகியுள்ள போதிலும் மொழிபரிவர்த்தனையில் ஏதாவது தொடர்பின்மையை எதிர்நோக்கினால் சிங்களமூல வெளிப்படுத்துகையே அதிகாரபூர்வமானதுமென வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

## முழுநேரப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சிநிறுவனம் - மொரட்டுவை, தேசிய தொழில்பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

சிங்களத்தில் எல்லாப்பாடநெறிகளும் தமிழில் மோட்டார் இயந்திரவியல் பாடநெறியும் நடாத்தப்படவுள்ளன.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், சிங்களம், கணிதம், உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பமுடிவுத்திகதி 2015.06.20 ஆகும்.

விண்ணப்பத்தினையும் விபரங்களையும் 10.05.2015 வீரகேசரி வார வெளியீட்டில் பார்வையிட முடியும். (10)



அரியாலை முள்ளி யாழிசை புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கூட்சித் தலைவர் அம்பலம் ரவீந்திரதாசன் ச.விஜிதரன்-கிராம அலுவலர், நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேஷா, கிராம அலுவலர் ராமலிங்கம் தவரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# கண்ணி அகற்றும் பணி ஆமை வேகத்தில் நகர்வு

## நிதி உதவி வற்றியதால் நெருக்கடி




இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவி குறைக்கப்பட்டிருப்பதனால், அந்தப் பணிகளில் தாமதமும் சிக்கல்களும் ஏற்பட்டிருப்பதாக கண்ணிவெடி மற்றும் வெடி பொருள்கள ஆய்வு மையத்தைச் சேர்ந்த வித்யா அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:- இலங்கையை கண்ணிவெடிகள் அற்ற நாடாக மாற்றுவதற்கு 2020 ஆம் ஆண்டு வரையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றது. எனினும் சர்வதேசத்தின் நிதியுதவிகள் குறைக்கப்பட்டுள்ள இப்போதைய நிலையில் குறித்த காலத்துக்குள் அந்த இலக்கை அடைவது கடினம். கடந்த 2009, 2010 ஆம் ஆண்டுகளில் முகாம்களில் தஞ்சமடைந்திருந்த பெரும எண்ணிக்கையிலான மக்களை மீள்குடியேற்ற வேண்டிய அவசர தேவை இருந்ததனால், உதவி வழங்கும் நாடுகள் பலவும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு அதிகளவில் உதவிகளை வழங்கி வந்தன.

எனினும் இப்போது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு, யுத்தத்தின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதனால், உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கான உதவிகளை குறைத்திருக்கின்றன.

நிதிப்பற்றாக்குறை காரணமாக இப்போது ஒருசில நிறுவனங்களே கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன. அத்துடன் இலங்கை இராணுவத்தினரும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

கடந்த 2011 ஆம் ஆண்டில் 53 சதுர கிலோமீற்றர் பரப்பிலும், 2012 ஆம் ஆண்டு 22 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும், 2013 ஆம் ஆண்டு 8 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும், 2014 ஆம் ஆண்டு 5 சதுர கிலோ மீற்றர் பரப்பிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடந்துள்ளன. யுள்ளன.

# பிரதமர் ரணிலுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை திரைமறைவில் திட்டம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

பெற்ற சுதந்திரனம் ஆபத்தில் என்ற தொனிப்பொருளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து குருநாகலில நேற்றுமுன்தினம் மாலை மக்கள் கூட்டம் நடாத்தப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இந்த தகவலை வெளியிட்டார்.

எதிர்வரும் வாரத்தில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

புதிய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட 100 நாள் வேலைத்திட்டம் வெறும் கண் துடைப்பு என்று சாடியுள்ள அவர், குறிப்பிட்ட காலத்திற்குள் இடம்பெற்ற மோசடிகளே ஏராளம் என்றும் குற்றம் சாட்டினார்

# வவுனியா காணித்தகராறு சுமுகமாக தீர்க்க முயற்சி

வவுனியா மாவட்டம் பேயாடி கூழாங்குளம் காணிப பிரச்சினை குறித்து வவுனியா பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என வட மாகாண சுகாதார மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் பேயாடி கூழாங்குளம் காணிப் பிரச்சினை தொடர்பில் அப்பகுதி மக்கள் மற்றும் திருமறைக் கலாமன்றத்தினருடன் கலந்துரையாடிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா - நொச்சிமோட்டை, பேயாடி கூழாங்குளம் பகுதியில் உள்ள பொதுத் தேவைக்கான நிலத்தினை வவுனியா பிரதேச செயலாளர் திருமறைக் கலாமன்றம் என்ற அமைப்புக்கு வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீட்டுத் தருமாறு கோரி பேயாடி கூழாங்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த காணியில் கட்டட நிர்மாணத்திற்கான ஆரம்ப வேலைகளைச் செய்ய அப பகுதி மக்கள் தடையாக இருப்பதாக தெரிவித்து திருமறைக் கலாமன்றத்தினரால் பொலிஸ் நிலையத்தில் மக்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து இரு பகுதியினரும் இது தொடர்பில் வடமாகாண சுகாத்ார மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இரு பகுதியினரையும் அழைத்து கலந்துரையாடல் ஒன்று அமைச்சின் உப அலுவலகத்தில் இடம்பெற்றது. இருதரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடலை அடுத்து குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்கு வவுனியா பிரதேச செயலாளருடன் கலந்துரையாடிய பின்னரே தீர்க்க முடியும் எனவும் இது தொடர்பில் தாம் கலந்துரையாடுவதாகவும் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்

# பரமர் சங்கமம்



'தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு' எனற பாடலைக் கேட்டதும் அதிலை சொல்லப்பட்டுள்ள தத்துவத்தை வலுவா உணர்ந்து ரசிக்கிறவன் நான். வழியில்லாத ஏழை எளியதுகளுக்குத் தானை பல தத்துவங்கள் கூறியும் வைச்சிருக்கினம். இருக்கிறவனுக்கு ஒரு கோடி இல்லாதவனுக்குப் பலகோடி இதுவும் அதிலை ஒண்டுதான்.

வதி வீழருக்கெண்டால் வீதியேம் வீடாகப் பாவிக்க வேண்டியதேம் சாடைமாடையாச் சொல்லியிருக்கிறாப் போலை உங்களுக்குப் படேல்லையே. வீட்டைக் குப்பைத் தொட்டியை விடவும் மோசமா வைச்சிருக்கிறவேம் இருக்கினம். அது புளையெண்டு சொல்ல மாட்டன் ஏனெண்டால் மற்றவைக்கு அதால தீங்கு அவர்களாலை ஏற்படாதெல்லே!

வாறநோய் நொடி எல்லாத்தேம் அவைதானை அனுபவிப் பினம். அதாலை ஒரு முடிவுக்கு வந்தேப்பிறகு வீடு வாசல் வளவு களைத் துப்புரவா வைச்சிருக்க வேணுமெண்ட பாடத்தைப் பழச்சுக்கொண்டு வாழ்ப்பாபினம். வீடு வாசலைத் துப்புரவா வைச்சிருக்கிறவையாலை தான் ஊர், நாடு, நகரமெல் லாம் நாறிக்கிடக்கெண்டது எத்தினை பேருக்குத் தெரியும்?

என்ன விசர்க்கதை கதைக்கிறார் பரமரெண்டு யோசிக் கிறியளே! பின்னை என்ன நகரங்களிலை உள்ள மாநகர சபை சுகாதார ஊழியரெண்டுற கான் கழுவுற, குப்பை எடுக் கிற வேலைக்காரர் ஏதாவது கோரிக்கையை முன்வைத்து ஒரு வாரத்துக்குத் துப்புரவு செய்யேல்லை எண்டா நகரங்கள் நாறுறநாத்தம் மூக்கைப் பொத்திக்கொண்டு தானை போய்வர வேண்டியிருக்கும்.

இப்ப புதுப் பிரச்சினை குப்பை கூழங்களைக் கொண்டு செல்ல வாகனங்கள் இல்லை எண்டால் போச்சே! அதைக் கொண்டே காடாத்த இடமில்லையாம். அதாலை வீதிகள் தோறும் குப்பை கூழங்களால் நிரம்பி வழியுது. வீதி வீதியாப் போய் குப்பை கூழங்களை எடுக்கும் வாகனங்கள் வந்தே அரை ஆண்டேம் தாணமட்டுது எண்டுதான் சொல்ல வேணும்.

இதாலை வீடு வழிய சேரும் குப்பையள் இரவோடிரவாக சொப்பிங், பொலித்தீன் பைகளில் பொதிகளாகி வீதியில் குறிப்பிட்ட ஒரு இடத்தில பெரிய குப்பைச் சந்தை உருவாகி விடுகிறது. இப்ப எனக்கொரு வானொலி விளம்பரம் ஞாபகம் வருகுது.

வேலைக்குப் போற கணவனிடம் மனைவி ரெண்டு பொதிகளைக் கொடுப்பா என்ன இண்டைக்குப் பாசல் பெரிசா இருக்கெண்டு கணவன் கேட்பார். இது குப்பை அப்பா போகேக்கை றோட்டிலை எறிஞ்சிட்டுப் போங்க எண்டு மனைவி கூறுவாள் இந்த விளம்பரம் என்னத்தைச் சொல்லுது?

உங்கடை வீடுகளை எவ்வளவு துப்புரவா வைச்சிருக்கி றீங்க அதுபோலை வீதி என்டுற வீட்டேம் துப்புரவா வைச்சிருக கத்தானே கூறப்படுகுது. றோட்டிலை குப்பையளைப் பாத்து வெளிநாட்டவங்கள் அப்பகுதி வீடுகளும் மக்களும் குப்பைய ளெண்டு நினைக்கிறதை ஒருக்கா நினைச்சுப் பாருங்க வெட்கம் வருவதில்லையா சொல்லுங்க பாப்பம்..

# மைத்திரி - மகிந்த சந்திப்பை திரிபுபடுத்திய அரச ஊடகங்கள்

## குற்றம் சாட்டும் டளஸ்

தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையேயான சந்திப்பு தொடர்பில் அரச ஊடகங்கள் செய்திகளை திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளன என முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாராஹேன்பிட அபயராமவில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தற்போதைய மற்றும முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இடையேயுள்ள சந்திப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்தும் நோக்கில் அண்மையில் இடமபெற்றது.

ஆனால் அன்றைய தினம் இடம் பெற்ற சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது நான் பேச விரும்பவில்லை. அது தொடர்பில் ஊடகங்கள் செய்திகளை வெளியிடடிருந்தன.

ஆனால் அரச ஊடகங்கள் அன்றைய சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை மிகவும் திரிபுபடுத்தி வெளியிட்டிருந்தன. அன்றைய தினத்தில் பேசப்படாத பல விடயங்களை சில ஊடகங்கள் வெளியிட்டன.

இந்த அரச ஊடகங்கள் யாருடைய தேவைக்காக இவ்வாறு சுதந்திரக் கட்சிக்கிடையேயுள்ள ஒற்றுமையை சிதைக்கும் வகையில் செயற்படுகின்றன.

சுதந்திரக் கட்சியின் ஒற்றுமையை ஐக்கிய தேசியக்கட்சி சீரழிக்க முயற்சிக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஆனால் அரச ஊடகங்களில் இவ்வாறான செயற்பாடுகள், எமது கட்சியினுள் பிளவை ஏற்படுத்தும் சதியின் பின்னணியில் மேலும் பலர் இருக்கின்றனரோ என்ற வலுவான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும். கட்சியின் ஒற்றுமையை பாதுகாப்பது எமது கடமை என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், உள்ளூராட்சி சபைகளை நீடிக்காவிடின், உடனடியாக தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

அதைவிடுத்து உள்ளூராட்சி சபைகளை விசேட ஆணையாளர் மற்றும் சபை செயலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ்



நடாத்தக்கூடாது. இது ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்காகவே இவ்வாறு நடாத்தப்படுகிறது என்பது எமக்கு நன்றாகப் புலப்படுகிறது.

"ஐ.தே.கட்சியின் அரசியல் சதிக்கு நகர சபை, பிரதேச சபை மற்றும் மாநகர சபை ஆகியவற்றை பழியாக்கவேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்படுவது நிச்சயம்

## அமைச்சர் ராஜித திட்டவட்டம்

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லை இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இது மேலும் நீடிக்கப்படமாட்டாது.

இது தொடர்பாக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் காரணமாக உள்ளூராட்சி மன்ற கால எல்லை இம்மாதம் 15 ஆம் திகதி விஸ்தரிக்கப்பட்டது.

எனவே இதற்கு மேலும் குறித்த கால் எல்லையை நீடிப்பதற்கு திட்டமில்லை என அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் கலைக்கப்படும் என, அமைச்சர் ஜோன் அமரதுங்க வத்தளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தரம் - 3 பரீட்சை முன்னோடி - 2015 (தமிழ்)

பகுதி - I

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01)** பின்வரும் சொற்களில் உள்ள இடைவெளிகளை பூர்த்தி செய்க

01.சி......னஞ் சீ......வர் 02.சேர் ........து

03.வி ...... யாடு .....ம் 04.மரங் .....ள்

05.பூ .... ம் க .....யும்

**(02)** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள பன்மைச் சொற்களுக்கு ஏற்ற வினைச்சொற்களை எழுதுக

| | பெயர்ச்சொற்கள் | வினைச்சொற்கள் |
|---|---|---|
| 06. | பூக்கள் | .................. |
| 07. | நாய்கள் | .................. |
| 08. | சிறுவர்கள் | .................. |
| 09. | மரங்கள் | .................. |
| 10. | மாணவர்கள் | .................. |
| 11. | காகங்கள் | .................. |
| 12. | கதிரைகள் | .................. |
| 13. | படங்கள் | .................. |

**(03)** இடைவெளியைப் பூர்த்தி செய்வோம்

14.எனது ............................ வாலை ஆட்டியது

15.சிறுவர்கள் பாடம் ............................

16.நான் ஆற்றில் ............................

17.மாம்பழம் கீழே ............................

18.அணில் மரக்கிளையில் ............................

**(04)** பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க

| | | | |
|---|---|---|---|
| 1.பருந்து | 2.ஒற்றுமையாக வாழ வேண்டும் | 3.காகம் | 4.கிளிகள் |
| 5.பறவைகள் கொத்தியதால் | 6.கூட்டில் | 7.புற்றிலிருந்த பாம்பு | |
| 8.பறவைகள் குஞ்சுகளைத் தூக்கிச் செல்வது | | | |

19.குருவி எங்கு முட்டையிட்டது? ............................

20.முட்டையைப் பார்த்தது எது? ............................

21.பாம்பை முதலில் பார்த்தது எது? ............................



**(12)** பின்வரும் படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களை எழுதுக

70.

..........................

71.


..........................


72.

..........................

73.


..........................

74.

..........................

75.

..........................

76.

..........................

77.

..........................

**(13)** ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக

78.காடு - ............................

79.உணவு - ............................

80.அருகில் - ............................

81.வேகமாக - ............................

**(14)** தரப்பட்டுள்ள சொற்களைப் பார்த்து உறுப்பமைய எழுதுக

82.குதிரை - ............................

83.அரண்மனை - ............................

84.முறைப்பாடு - ............................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).01.சூழல் 02.கனி 03.பச்சைக்கம்பளம் 04.கனிகள் 05.மணம் 06.கொண்டது
(02).07.முயற்சி 08.தேநீர் 09.கைம்மருந்து (03).10.குற்றத்தை மறைத்தல் 11.தந்திரம்
(04).12.சரி 13.பிழை (05).14.நோய் 15.தசரத 16.பெண்
(06).17.தேசம் 18.நவீனம் 19.இன்பம் (07).20.நட்பு 21.உள்ளம்
(08).22.பகற்போசனம் 23.காலையுணவு (09).24.our classroom (10).25.o,c 26.a 27.o
(11).28.தாத்தா வெட்(ட்)டகியா (12).29.நாம் விளையாடச் செல்வோமா?
(13).30 - 32 வரை விரும்பிய வசனம் (14).33.24789 34.14நாட்கள் 35.235.00 36.7.05
37.1.9 2.15cm² 38.1.89km 2.24km 39.2 40.சதுரம்
2..B 41.25 நிமிடங்கள் 42.1.45 2.10 (15).43.கோழி
44.பூனை 45.நரம்புத்தையல் 46.குருவிச்சை 47.6
48.வட்டுக்கத்தரி 49.காற்று 50.பித்தளை 51.கொடித்தோடை
52.கூரைகளை இறுக்குவதற்கு 53.புகையிலை 54.கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக வீதி
55.சல்லாரி 56.தொற்றுநீக்கியும் பஞ்சும் 57.போகன்விலா 58.அவரை
59.வங்கி 60.கடுகண்ணாவை 61.மின்தாக்கம்

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்

22. 'கீ கீ' என்று கத்தியது எது? ..............................

23. வட்டமிட்டது எது? ..............................

24. பாம்பு ஏன் கீழே விழுந்தது? ..............................

25. பருந்தின் கெட்ட குணம் என்ன? ..............................

26. நாங்கள் எப்படி வாழ வேண்டும்? ..............................

**(05) ஒத்தகருத்துச் சொற்களை இணைக்குக**

| | |
|---|---|
| 27. சண்டை | மலர்கள் |
| 28. அழகான | ஆகாயம் |
| 29. மகிழ்ச்சி | யுத்தம் |
| 30. வானம் | பள்ளிக்கூடம் |
| 31. பூக்கள் | வடிவான |
| 32. பாடசாலை | சந்தோஷம் |

**(06) எதிர்க்கருத்துச் சொற்களை இணைக்குக**

| | |
|---|---|
| 33. இரவு | இன்பம் |
| 34. துன்பம் | சிரித்தான் |
| 35. பெரிய | பகல் |
| 36. வானம் | சிறிய |
| 37. அழுதான் | பூமி |

**(07) பின்வரும் எழுத்துக்களை ஒழுங்கு முறையில் அமைத்துச் சரியான சொல்லை எழுதுக**

38. ம ர மா ம் ..............................

39. சா லை பா ட ..............................

40. பா ப் சா டு ..............................

41. த ம் க த் பு ..............................

42. சி ரி ய ஆ ர் ..............................

**(08) தரப்பட்ட சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க**

43. மீன், 44. குளம் 45. பூக்கள் 46. வலை 47. தண்ணீர்

43. ..............................

44. ..............................

45. ..............................

46. ..............................

47. ..............................



**(09) கட்டங்களைப் பூர்த்தி செய்க**

| | | | | |
|---|---|---|---|---|
| 48 ப | 49 | ல | 51 | |
| ■ | ரு | ■ | லி | ■ |
| 50 | | 53 பி | ■ | 54 கா |
| ■ | 52 பு | | 55 யா | |

இடமிருந்து வலம்

48. சூரியனுக்கு ஒத்தகருத்துச்சொல்

50. அண்ணனுக்கு எதிர்கருத்துச்சொல்

52. தெரியாது என்பதன் ஒத்தகருத்து

55. என்ன? என்பதன் ஒத்தகருத்து

மேலிருந்து கீழ்

49. இனிக்கும் பயிர்

51. காயம் ஏற்பட்டால் வருவது

53. பங்கிடுதல் என்பதன் ஒத்தகருத்து

54. கேட்டலுக்குத் தேவையானது

**(10) உங்கள் நண்பருடன் உரையாடிப் பின்வரும் வினாக்களை வினவி விபரங்களை எழுதுங்கள்**

56. பெயர் : ..............................

57. முகவரி : ..............................

58. பிறந்த திகதி : ..............................

59. வயது : ..............................

60. பால் : ஆண் / பெண் ..............................

61. தந்தையின் பெயர் : ..............................

62. தாயின் பெயர் : ..............................

63. அவசர நிலைமையில் அறிவிக்க வேண்டியவர் பெயரும் முகவரியும் : ..............................

..............................

64. தொலைபேசி இலக்கம் : ..............................

**(11) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களையும், எதிர்க்கருத்துச் சொற்களையும் கட்டடத்தில் உள்ள சொற்களில் இருந்து இனங்கண்டு, எதிரேயுள்ள கோடுகளில் எழுதுக**

| சொல் | ஒத்தசொல் | எதிர்ச்சொல் |
|---|---|---|
| 65. இருள் | .............. | .............. |
| 66. மகிழ்ச்சி | .............. | .............. |
| 67. அருகில் | .............. | .............. |
| 68. சிரிப்பு | .............. | .............. |
| 69. செல்வந்தன் | .............. | .............. |

| | | | | |
|---|---|---|---|---|
| தூரத்தில், | ஏழை, | நகைத்தல், | துக்கம், | பணக்காரன், |
| சந்தோஷம், | அண்மையில், | அழுகை, | இருட்டு, | வெளிச்சம், |

# வடக்கிலிருந்து படை விலகல் இப்போதைக்கு சாத்தியம் இல்லை

(ஜெனிவா)

இலங்கையின் வடக்கிலிருந்து படையினரை முழுமையாக அகற்றுவது சாத்தியம் இல்லாத விடயம் என்று ஐரோப்பிய ஒன்றியம் கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கில் போர் நிறைவுக்கு வந்து 6 வருட காலம் முடிவடையும் நிலையில் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் டெலி இதனை வலியுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடன் முரண்பட்ட விடயங்கள் தொடர்பில் பணியாற்றக்கூடிய வகையில் பொறிமுறை ஒன்று தயாரிக்கப்படுவதை ஐரோப்பிய ஒன்றியம் எதிர்ப்பார்க்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வு தொடர்பில் குறைவான முன்னெடுப்புக்களே மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கில் இராணுவமயம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பலரும் எண்ணுகின்றனர். இந்தநிலையில் வடக்கில் இருந்து முழுமையாக இராணுவத்தை அகற்ற முடியும் என்று எவரும் எதிர்ப்பார்க்க முடியாது. எனினும் முரண்பாடான விடயங்கள், ஐக்கிய இலங்கைக்குள் பேசித்தீர்க்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

இதற்காக அனைத்து தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.

இந்த விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட அமைப்புக்கள் தமது அனுபவங்களை கொண்டு இலங்கைக்கு உதவத் தயாராக உள்ளதாகவும் டேவிட் டெலி தெரிவித்துள்ளார்.

நடைமுறை அரசாங்கம் தென்னாபிரிக்காவின் அனுபவங்களை பெற்றுக் கொள்ள முயற்சிப்பது வரவேற்கத்தக்கது. அது ஒரு சிறந்த முன்னெடுப்பாகும்.

ஐரோப்பாவின் அனுபவங்களை இலங்கை பின்பற்றலாம் என்று கூறுவது வெறுமனே சுயநலம் கருதிய கருத்து அல்ல. ஐரோப்பாவில் ஏற்கனவே நல்லிணக்க விடயத்தில் சிறந்த அனுபவங்கள் பெறப்பட்டுள்ளன.

வடஅயர்லாந்தின் சமாதான நடவடிக்கைகள், போல்கன் உட்பட்ட நல்லிணக்க நடவடிக்கைகளை கூறலாம்.

எனினும் இலங்கையின் விடயத்தை பொறுத்தவரையில் அது இலங் கைக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும் என்று டேவிட் வலியுறுத் தியுள்ளார்.

# அடைமழையால் போக்குவரத்து ஸ்தம்பிதம்

பெய்துவரும் அடை மழையினால் புத்தளம்-மன்னார் பிரதான வீதியிலுள்ள எழுவாக்குளம் பிரதேசம் நீரில் மூழ்கியுள்ளதாகவும், இதனால் அப்பாதையின் போக்குவரத்து நடவடிக்கைகள் ஸதம்பிதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜாங்கனை நீர்த்தேக்கம், தெதுரு ஓயா நீர்த்தேக்கம் என்பவற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதனால், கலா ஓயா மற்றும் தெதுரு ஓயா என்பவற்றின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது

# பாணந்துறையில் வர்த்தகர் கொலை

(கொழும்பு)

பாணந்துறை கிரேண வீதியில் உள்ள கடையொன்றின் பெண் முதலாளி, கடைக்குள் வைத்தே கொலைசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலையிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார், விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் மோப்ப நாயான கிரேரோ. அக்கடையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள மருந்தகத்துக்கு அருகில் போய் நின்று கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

# கிழக்கில் மீள்குடியமர்வோருக்கு பாதுகாப்பு உத்தரவாதம் உண்டு

## பிரதி அமைச்சர் அமீர் அலி உறுதி

மட்டக்களப்பு - வாகரை மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் குடியிருந்து கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து, தற்போது மீள்குடியேறும் மக்களின் பாதுகாப்பிற்கு எந்தவொரு தடையும் ஏற்படாதென சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிரான் மற்றும் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழ்ந்து வந்த மக்கள் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்தனர்.


தற்போது தங்களது சொந்த இடங்களில் மீள் குடியேறுவதற்கு அரசாங்க அதிகாரிகள் தடையாக இருப்பதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தன்னிடம் முறைப்பாடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் குறித்த பகுதியில் சொந்தமாக வாழ்ந்த மக்களுக்கு அவர்கள் மீள்குடியேறுவதற்குரிய உதவிகளைச் செய்யுமாறும், புதிதாக எவரும் குடியேறுவதற்கு அனுமதிக்க வேண்டாமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மதுபான சாலைகளைக் குறைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். அவ்வாறு நடைபெறாத பட்சத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து, மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற் கொள்ளவுள்ளதாகவும் சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

# தோற்றுப்போன சமாதான முயற்சி

## நூல் வெளியீடு




இலங்கையில் நோர்வேயின் சமாதான முயற்சிகளை விபரிக்கும் To end a civil war நூல் செப்ரெம்பர் மாதம் வெளிவரவிருப்பதாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பக்கத்தில் தகவல் வெளியிட்டுள்ளார்.

To end a civil war என்ற தலைப்பில இலங்கையில் முன் னெடுக்கப் பட்டுள்ள நோர்வேயின் சமாதான முயற்சிகளை இந்த நூல் விபரிக்கின்றது.

மார்க் சோல்ட்டர் (mark salter) என்ற ஆய்வாளர் இந்த நூலை எழுதியுள்ளார். இலங்கையில் அமைதியைக் கொண்டு வர எவ் வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என்பதை இந்த நூல் விபரிக்கின்றது.

# புதிய அரசின் பழிவாங்கல் முஸ்லிம்கள் மீதே ஆரம்பம்

நல்லாட்சி வந்த பின்னர் முதலில் முஸ்லிம் ஒருவரே பழிவாங்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதியின் முஸ்லிம் சமய விவகார ஆலோசகர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் ஆளுநர் பதவி பறிக்கப்பட்டது. ஆரம்ப முதல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அவருக்கு இந்த நிலை ஏற்பட்டது.

பொய் பிரசாரங்களினால் கடந்த தேர்தலில் முஸ்லிம்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பிரித்தானிய தேர்தல் முடிவுகள் புலிகளின் ஆதரவாளர்களுக்கு மங்குசனி

## அமால் அபேகுணவர்த்தன தெரிவிப்பு

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைப் புலிகள் ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் தோற்கடிக்கப்பட்டுள்ளதானது, இலங்கைக்கு நல்ல செய்தி என்று இலங்கைக்கான கொன்சர்வேட்டிவ் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த அமால அபேகுணர்வத்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், முன்னைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த விடுதலைப் புலிகள் ஆதரவு கொன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களான, லீ ஸ்கொட் மற்றும், நிக்டி பொய்ஸ் ஆகிய இருவரும், கடந்த வியாழக்கிழமை நடந்த் தேர்தலில் தோல்வியைச் சந்தித்துள்ளனர்.

இவர்கள் தோல்வியடைந்தமை, பிரித்தானியாவில், விடுதலைப் புலிகளின் பரப்புரைக்கு பாரிய பின்னடைவாகும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள், இலங்கைக்கான நல்ல செய்தியாக அமைந்துள்ளது என்று இலங்கைகான கொன்சர்வேட்டிவ் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த அமால் அபேகுணவர்த்தன குறிப்பிட்டார.

இலங்கைகயின் நண்பர்களான ஜேம்ஸ் வார்ட்டன், அன்ட்ரு ரொசின்டெல், மத்யூ ஒபோட், பொப் பிளாக்மன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்றுள்ள லியம் பொக்ஸ்சும் கூட இலங்கையின் பலமான நண்பன். இதைவிட எமது சொந்த உறுப்பினராக ரணில் ஜெயவர்த்தனவும் வெற்றி பெற்றுள்ளார். என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தலில், இலங்கை வம்சாவழியினர் ஐந்து பேர் போட்டியிட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இவர்களில் உமா குமரன், சொக்கலிங்கம் யோகலிங்கம், ரணில் ஜெயவர்த்தன, சாம்லி பெர்னாண்டோ ஆகியோர் பற்றிய தகவல்களே ஏற்கனவே வெளியாகியிருந்தன.

எனினும், இலங்கை வம்சாவழியினரான, ரதி அழகரத்தினம் என்ற பெண் வேட்பாளரும் இந்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வியை சந்தித்துள்ளார்.

பிரித்தானிய சுதந்திரக் கட்சியின் சார்பில், டல்விச் மற்றும் வெஸ்ட் நோவூட் தொகுதியில் போட்டியிட்ட, ரதி அழகரத்தினம் 1606 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார்.

இங்கு, தொழிற்கட்சி வேட்பாளர், 27,772 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## வாழ்க வளமுடன்

பெயர் : நி.நிமாஷா
முகவரி: யாழ்ப்பாணம்.



அகவை 4 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
..............................
பெற்றோர் கையொப்பம்

# பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ போதுமான நிதி கிடைக்கவில்லை

## கவலை தெரிவித்துள்ளது ஐ.நா.



நேபாள நாட்டில் பூகம்பத்தால பாதிக்கப்பட்டோருக்கு தேவைப் படும் உதவிகளைச் செய்ய போது மான நிதி கிடைக்கவில்லை என்று ஐ .நா கவலை தெரிவித் துள்ளது.

நேபாள நாட்டில் கடந்த ஏப் ரல் 25 ஆம் திகதி 7.9 ரிக்டர் அள வில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டு அந்த நாட்டையே உருக் குலைத்து விட்டது.

தலைநகர் காத்மண்டுவில் ஏராளமான வீடுகள், கட்டடங் கள், ஹொட்டல்கள், வர்த்தக நிறு வனங்கள், பழமை வாய்ந்த புரா தன சின்ன கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

மேலும் பலியானவர்களின் எண்ணிக்கை 8,000 ஆக உயர்ந் துள்ளது, இதுதவிர 17,803 பேர் காயம் அடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு பிற நாடுகளில் இருந்து நிதி உதவி செய்துவரு கின்றன.

ஆனால், இந்த நிதி போது மானதாக இல்லை என ஐ.நா தெரிவித்துள்ளது. இதுவரை நிவாரண நிதியாக 22 மில்லியன் டொலர்கள் மட்டுமே கிடைத்துள் ளதாக நேபாள பணிகளுக்கான ஒருங்கிணைப்பாளரான ஜேம்ஸ் மெக்கோல்ட்ரிக் தெரிவித்துள் ளார்.

சுமார் இரண்டு வாரத்துக்கும் முன்பு நேபாளத்தில் இடம்பெற்ற பூகம்பத்தால் பாதிக்கப்பட் டோருக்கு உதவ 415 மில்லியன் டொலர்கள் வேண்டும் என்று ஐ.நா. கோரியிருந்தது.

நிதி உதவிகள் வேகமாக கிடைத்தால்தான், மலைப் பகு திகளில் இருக்கும் தொலைதூர கிராமங்களில் உள்ள மக்களுக்கு உதவிப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியும் என்று ஐ. நா. அதிகாரி தெரிவித்துள்ளார்.

# கைதிகளுக்கிடையில் மோதல் ஈராக்கில் 36 பேர் உயிரிழப்பு

ஈராக் சிறையில் கைதிகளிடையே ஏற்பட்ட பயங்கர மோதலில், 6 பொலிஸார் உள்ளிட்ட, 36 பேர் உயிரிழந்தனர். 200 கைதிகள் தப்பியோடி விட்டனர். அந்நாட்டின் தலைநகர் பாக்தாத்தில் இருந்து, 80 கி.மீ.தொலையில் உள்ளது.

காலிஸ் சிறை. இங்கு, கைதிகளிடையே திடீரென்று மோதல் வெடித்தது. இருதரப்பினர் பயங்கர ஆயுதங்களால் தாக்கிக் கொண் டனர். இதை தடுக்க வந்த பொலிஸாரை, இரு தரப்பினரும் சர மாரியாக தாக்கினர். இதில், 30 கைதிகளும், ஆறு பொலிஸாரும் உயிரிழந்தனர். இந்த களேபரத்தை பயன்படுத்தி, சிறையில் இருந்து, 40 கைதிகள் தப்பியோடி விட்டனர். ஆனால், இந்த எண் ணிக்கை, 200இற்கும் அதிகமாக இருக்கும் என, சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதற்கிடையே, பாக்தாத்தின் கராடா பகுதியில், சக்தி வாய்ந்த கார் வெடிகுண்டு வெடித்தது. இதில், பொதுமக்கள், 8 பேர் உயிரிழந்தனர்.

# கையெறிகுண்டு வீச்சு 14 பேர் காயம்

காஷ்மீர் மாநிலம் ஷேபியான் மாவட்டத்தில் உள்ள படபோரா சவுக் பகுதியில் உள்ள மக்கள் நெரிசல் மிகுந்த சந்தை அருகே நேற்று முன்தினம் பகல் பொலி ஸார் வாகன போக்குவரத்தை சரி செய்து கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக ஒரு வாகனத்தில் சென்ற தீவிர வாதிகள், திடீரென்று பொலி ஸார் மீது கையெறி குண்டை வீசிவிட்டு மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றனர். ஆனால் அந்த குண்டு, குறி தவறி மக்கள் மீது விழுந்தது.குண்டு வெடித்ததில் 2 சிறுமிகள் உடபட 14 பேர் படு காயம் அடைந்தனர். உடனடி யாக அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட் டனர்.


# நீர் மூழ்கிக் கப்பலில் ஏவுகணை வடகொரியாவின் புதிய சாதனை

“நீர் மூழ்கிக் கப்பலில் இருந்து, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது என, வடகொரியா தெரிவித்துள்ளது. எனினும், இந்த சோதனை எங்கே, எப்போது நடைபெற்றது என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆனால், “ஏவுகணை சோதனை, வடகொரிய அதிபர் கிம் ஜாங் முன்னி லையில் நடைபெற்றது என, வடகொரிய அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதிபர் கிம் உத்தரவின்படி, நீர்மூழ்கிக் கப்பல், நீரில் அமிழ்ந்த தாகவும், அடுத்த சில நிமிடங்களில், நீரைக் கிழித்துக் கொண்டு, ஏவுகணை சீறிப் பாய்ந்ததாகவும், வடகொரியா தெரிவித்துள்ளது. இச்சோதனை வெற்றி பெற்றதை அடுத்து,“நாட்டின் இறையாண்மை மற்றும் கண்ணியத்தை சீர்குலைக்க முயலும் எந்த அன்னிய சக்தியையும், தண்ணீருக்கு அடியில் இருந்தும் தாக்க முடியும் என் பதை வடகொரியா நிரூபித்துள்ளது,“என, அதிபர் கிம் தெரிவித்தார்.

வடகொரியாவின் நீர்மூழ்கி ஏவுகணை சோதனை, தென் கொரியா, ஜப்பான் மற்றும் கிழக்கு ஆசியாவில் உள்ள அமெரிக்க இராணுவத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

# மிதக்கும் 3அடுக்கு சொகுசு வீடுகள் துபாய் கடலில் அமைக்கத் திட்டம்



துபாய் கடல் பகுதியில் கட லில் மிதக்கும் வகையில் மூன்று அடுக்குகள் கொண்ட வீடுகள் போன்ற தங்குமிடங்களை ஏற் படுத்த மிதக்கும் கடற்குதிரை எனும் பெயரில் இத்திட்டத்தை ஆரம்பிக்க பிரபல சர்வதேச நிறுவனமான கிளைன்டைன்ஸ்ட் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தில் 3 அடுக் குகளாக இந்த மிதக்கும் தங்குமிடங்கள் இருக்கும் கடல் நீருக்கு அடியில் ஒரு அடுக்கும், கடல் மட்டத்தில் ஒரு அடுக்கும் மேற்புறத்தில் மற்றொரு அடுக் கும் அமைக்கப்படும் வரவேற பறை கடலின் மேற்புறத்திலும் குளியல் அறை மற்றும் படுக்கை அறை கடலின் அடியிலும் இருக் கும் மேலும் கீழ்த்தளத்தில் ப க் கையறையிலிருந்து கடற் பாறை கள், மீன்களை இரசிக்கும் வகை யிலும் 2016ஆம் ஆண்டின் இறு திக்குள் இத்திட்டம் செயற் படுத்தப்பவுள்ளது.

கிளைன்டைன்ஸ்ட் நிறுவனத் தின் தலைமை நிர்வாக அதி காரி, ஜோசப் கூறுகையில், ஆராய்ச்சி, வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் என பல மாதங் களாக இத்திட்டம் பற்றி ஆய்வு செய்துள்ளோம். இது ஒரு புது மையான திட்டம் உலகம் முழு வதும் இது வரவேற்பைப் பெறும் புதிய மைல்கல் என்று நம்புகி றோம் என்றார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்க 90 இளைஞர்களுக்கு அமெரிக்கா பயிற்சி



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதி களை எதிர்த்து போரிடுவதற்காக 90 இளைஞர்களுக்கு அமெரிக்க இராணுவம் போர் பயிற்சி அளித்து வருகிறது.

கடந்த 8 மாதங்களாக சிரி யாவிலும், ஈராக்கிலும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர் தாக்குதலை மேற்கொண்டு வரு கின்றனர்.

இந்த தீவிரவாதிகளுக்கு எதி ராக அமெரிக்கா மற்றும் பிற நாடு கள் வான்வழித் தாக்குதலையும் நடாத்தி வருகிறது. எனினும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்க இராணுவ தலைமையகமான 'பென்டகன்' (Pentagon) புதிய முயற்சி ஒன்றில் இறங்கி இருக்கிறது.

இதற்காக சிரிய நாட்டின் 90 இளைஞர்களைத் தெரிவு செய்து ஜோர்டான் நாட்டில் அவர் களுக்கு சிறிய ரக ஆயுதங் களை கையாள இராணுவ பயிற்சியும் அளித்து வருகிறது.

இவர்களுக்கு உதவித் தொகை யும் வழங்கப்படுகிறது. போர்க் களத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிர வாதிகளுக்கு எதிராக சண் டையில் ஈடுபடுத்தப்படும்போது இவர்களுக்கு இன்னும் அதிக அளவில் உதவி செய்து தரப்ப டும் எனவும் உறுதி அளிக்கப்பட் டுள்ளது.

இவர்கள் அனைவரும் விரை வில் சிரியாவுக்குச் சென்று தீவிர வாதிகளுக்கு எதிராக சண்டை யில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து அமெரிக்க இராணுவ செயலாளர் ஆஷ்டன் கார்ட்டர் (Ashton Carter) கூறுகை யில், முதல் கட்டப் பயிற்சி சிறிய அளவில் அளிக்கப்பட்டு வரு கிறது. எங்களுடைய இந்த முயற்சி வெற்றி பெறும் என்று நம்புகிறோம். அடுத்த 3 ஆண்டு களுக்கு இந்த பயிற்சி தொடரும் என்று கூறியுள்ளார்.

# இராணுவ சரக்கு விமானம் விபத்து ஸ்பெயினில் 4பேர் உயிரிழப்பு



இராணுவத்தில் சரக்குகள் மற்றும் எந்திரங்களை ஏற்றிச் செல்ல வசதியாக புதிய ரக விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் சோதனை ஓட்டம் நடந்தது. விமானம் சான் பாப்லோ விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது. அதில் 6 பேர் பயணம் செய்தனர்.

விமானம் செவில்லே என்ற இடத்தில் பறந்த போது திடீரென தரையில் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இந்த விபத்தில் 4 பேர் அதே இடத்தில் பரிதாபமாக இறந்தனர். 2 பேர் படுகாயத்துடன் சிகிச்சை பெறுகின்றனர். விமானத்தில் கோளாறு ஏற்பட்டதால் அதை அவசரமாக தரை இறக்க விமானி முயன்ற போது மின் கோபு ரத்தில் மோதி தீப்பிடித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்து குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

# வாய்ப்புக்களை மாணவர்கள் சரிவர பயன்படுத்த வேண்டும்

## தெல்லிப்பளை பிரதேச செயலர் தெரிவிப்பு

(தெல்லிப்பளை)

எதிர்கால இளம் தலைமுறையினராகிய மாணவர்களுக்கு இன்றைய சூழ்நிலையில் வசதி, வாய்ப்புகள், கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வசதி வாய்ப்புக்களை மாணவர்கள் சரிவரப் பயன்படுத்திக் கொண்டு அறிவாற்றல் மற்றும் படைப்பாக்கத்திறன் உடையவர்களாக உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும் என' வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் தெல்லிப்பளை பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவிதைப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இயலுமைகளை மாற்றவர்களிடம் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த கவிதைப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுகின்றது. ஒவ்வொருவரும் தங்களுக்கிடையில் காணப்படுகின்ற திறன்களை வெளிக்கொண்டு வருவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதற்காக ஏற்படுத்தப்படுகின்ற வசதிகளையும் சந்தர்ப்பங்களையும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

எங்களுடைய காலம் யுத்த காலமாகக் காணப்பட்டது. இடப்பெயர்வுகளையும் அவலங்களையும் சந்தித்தமையால் இத்தகைய வசதிகளும் வாய்ப்புக்களும் அப்போது இருக்கவில்லை.

மாணவர்களாகிய உங்களுக்கு இன்றைய சூழ்நிலையில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த வாய்ப்புக்களை சரிவர பயன்படுத்திக்கொண்டு உங்களது சிந்தனை ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

# நூல் நிலையம் விஸ்தரிப்பு

(நவாலி)

நவாலியின் மூன்று கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாணவர்கள், பொது மக்களின் நன்மை கருதி நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் மற்றும் நூல் நிலையம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக உள்ளூர் பத்திரிகைகள் மற்றும் கொழும்பு பத்திரிகைகள் என்பன காலை 8 மணிக்கே வழங்கப்படுகின்றன. பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி சகலவிதமான நூல்களும் வழங்கப்பட்டுள்ளன. பத்திரிகைகளின் தொகுப்புக்கள் தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. அறிவியல் சார்ந்த ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதும் மாணவர்களும், ஏனையவர்களும் இந்நூலகத்தினை முழுமையாகப் பயன்படுத்தலாம்.

இதனைவிட அரசாங்கத்துறைகளில் போட்டிப் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களும் இந்நூலகத்தினை முழுமையாகப் பயன்படுத்தலாம் என நூலகர் சி.தேவராசா அறிவித்துள்ளார். (92)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

காணாமற் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் கட்டப் பணிகள், வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பணிகள் தொடர்பில் சர்வதேச ஆலோசகர்களின் ஆலோசனைகளையும் ஆணைக்குழு பெற்றுக்கொண்டுள்ளது. குறிப்பாக காணாமற் போனோர் தொடர்பான சர்வதேச ஆலோசகர் டெஸ்மன் டி சில்வாவுடன், அண்மையில் ஆணைக்குழு கலந்துரையாடியுள்ளது.

மக்ஸ்வல் பரணகம தலைமையிலான, காணாமற் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முதலாம் கட்டப் பணிகள் வட, கிழக்கு பிரதேசங்களில் கட்டம் கட்டமாக நடத்தப்பட்டது.

இதன்போது சுமார் 20 ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அவற்றில் 16 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகிந்த பிரதமர் வேட்பாளர் அடுத்த கூட்டம் விரைவில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை பிரதமர் வேட்பாளராக்குமாறு வலியுறுத்தி நடைபெற்று வரும் கூட்டத் தொடர் ஒவ்வொன்றிலும் கலந்துகொள்ளும் உறுப்பினர்களும், மக்களும் அதிகரித்தே வருவதாகவும், அடுத்த கூட்டம் எங்கு என்பதை விரைவில் அறிவிக்கவுள்ளதாகவும் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மம்பில தெரிவித்துள்ளார்.

அடுத்துவரும் ஓரிரு தினங்களில் அடுத்த கூட்டத்தை கூட்டவுள்ளோம்.

நுகேகொட கூட்டத்துக்கு வந்த அமைச்சர்களின் எண்ணிக்கை 0, கண்டி கூட்டத்துக்கு 01, இரத்தினபுரி கூட்டத்துக்கு 26 பேர், குருணாகல கூட்டத்துக்கு 57 பேர். அடுத்த கூட்டத்துக்கு எத்தனை பேர் என்பதை ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வினாவில் சேர்த்துக் கொண்டால் விடை கிடைக்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

# கெரியின் விஜயத்தை எதிர்க்காத ஜே.வி.பி.

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியின் இலங்கை விஜயத்தை ஜே.வி.பி. எதிர்க்கவில்லை என அக்கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் லால் காந்த குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சுமத்திய குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைப் பொறுத்தவரை அரசாங்கம் ஒன்றை அமைப்பதே முக்கியமானது என்று லால் காந்த தெரிவித்துள்ளார். முன்னர் ஜே.வி.பி., அமெரிக்க மற்றும் இந்திய தலையீடுகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு வந்துள்ளது.

எனினும் தற்போது அது தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது என்று விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மைத்திரி...

கட்சிக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது. ஏனெனில், அது அவர்களது கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இப்பேச்சுவார்த்தை குறித்து நேற்றைய ஞாயிறு சிங்கள வார இதழொன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், மக்கள் மத்தியில் இப்பேச்சுவார்த்தை குறித்து ஒருவிதப் பார்வை உள்ளது. உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### மின்சாரம்...

தெற்கைச் சேர்ந்த விநாயக மூர்த்தி உதயசங்கர் (வயது - 32) என்ற இளைஞரே உயிரிழந்தார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்கான சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### அரசியல்..

அதேநேரம், ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டுக்களையும் அவர் நிராகரித்துள்ளார்.

### உள்ளூராட்சி...

முன்னதாக கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடையவிருந்த குறித்த காலஎல்லை, நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக மே 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லை மேலும் நீடிக்கப்பட மாட்டாது என நேற்று முன்தினம், அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார்.

இதேவேளை, புதிய தேர்தல் முறை மாற்றத்துக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமாயின், அதற்கான தயார்படுத்தல்களுக்காக தேர்தல்கள் திணைக்களத்திற்கு சில காலம் தேவைப்படும் என, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லையை நீடிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### நல்லாட்சிக்கு...

நகர மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது பல கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றன.அனைத்து செயற்பாடுகளும் நல்லாட்சிக்காகவே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் செயற்பட்டவர்கள் தவறான வழியில் அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகவும், அவர்கள் நல்லாட்சிக்கு எதிராக செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக போராடியவர்களில் ஒருவர். அதேபோல் போரின் வெற்றிக்காகவும் போராடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வரும் பொதுத்...

தாகக் குறிப்பிட்ட இரா. சம்பந்தன், தமிழ் மக்கள் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறான ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளார்கள் என்பதை சர்வதேச சமூகம் அவதானித்துக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் மக்களின் உடனடித் தேவைகள், காணி விடயங்கள், தடுப்புக் காவலில் உள்ளவர்கள், காணாமற் போனவர்கள் மற்றும் அரசியல் தீர்வு ஆகியன குறித்து தேர்தலின் மூலம் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ் மக்கள் தமது வாக்குரிமையின் ஊடாக எவ்வாறான ஒரு அரசியல் தீர்வை நாடியுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும் என தெரிவித்த இரா.சம்பந்தன்,

சரித்திர ரீதியாக தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு சுயாட்சி இருக்க வேண்டும் என்ற உண்மையான கருத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கள மக்கள் மத்தியில் முன்வைப்பார் என்ற நம்பிக்கையுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதை உலகறியச் செய்வதற்கு தமிழ் மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும், என கூட்டமைப்பின் தலைவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கிளி.வன்னேரி...

தெரிவித்து புதைத்த இடத்தினையும் நேற்றுக்காலை பத்து மணியளவில் அடையாளம் காட்டியுள்ளார்.

இதனையடுத்து அக்கராயன் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு மேற்படி இரு சந்தேக நபர்களையும் அக்கராயன் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி பொலிஸாரிடம் கையளித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கொலை செய்யப்பட்டவர் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளிட்ட மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும், தனிப்பட்ட பகையே கொலைக்கு காரணம் எனவும் உறவினர்கள் குறிப்பிடுகின்றனர். (29)

### 20 ஆவது...

நிறைவேற்றப்பட்ட பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என முன்னதாக அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேர்தல் மாற்றங்கள் அடங்கிய திருத்தச் சட்டம் தொடர்பில், இன்று இடம்பெறவுள்ள அனைத்துக் கட்சிகளுக்கு இடையிலான சந்திப்பில், இணக்கப்பாடு எட்டப்படவில்லையாயின் நாடாளுமன்றத்தை கலைக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

எதுஎவ்வாறு இருப்பினும் இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படின் எதிர்வரும் 13 ஆம் திகதி அமைச்சரவையில் இந்த திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்படும் என, ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டதாக, அனுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# கூட்டு நினைவுச் செயன்முறைக்கு தமிழ்ச் சமூகம் செல்ல வேண்டும்

## விரிவுரையாளர் குருபரன் வலியுறுத்து




தமிழ்ச் சமூகம் தங்களுக்கு நேர்ந்த கொடுமைகளை தாங்களே முறையாகச் ஆவணப்படுத்துவதுடன், தாங்களே ஆழக் கூடிய, ஒழுங்கமைக்கக்கூடிய ஒரு கூட்டு நினைவுச் செயன்முறைக்கு செல்ல வேண்டியது அவசியமானது என தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஊடகப் பேச்சாளரான யாழ் பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போதும், அதற்குப் பின்னரும் நிகழ்ந்த கொடூரங்கள் தொடர்பில் இடம்பெறவுள்ளதாகக் கூறப்படும் உள்ளக விசாரணைப் பொறிமுறையும் இறுதியில் ஏமாற்றும் முயற்சியாக இருக்கப் போகின்றது என்பதாலேயே இதனை தான் வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் சிவில் சமூக அமையம் ஏற்பாடு செய்த நினைவு கூரலுக்கான உரிமை தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தனிநபர் நினைவு கூரல், பொது நினைவு கூரல், நாட்டில் இது வரையில் இடம்பெற்ற நினைவு கூரல் தொடர்பான அனுபவங்கள், அதிகாரத்தில் உள்ளவர்களால் சகிக்கக் கூடிய நினைவுகளுக்கு அனுமதித்ததும், சகிக்க முடியாத நினைவுகளுக்கு அனுமதி அற்று இருத்தல் ஆகிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் லக்ஷ்மன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சிறப்புப் பேச்சாளர்களாக தமிழ் சிவில் சமூக அமையத்தின் துணைப் பேச்சாளர் அருட்தந்தை எழில் ராஜன், யாழ் பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் குமார வடிவேல் குருபரன், மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்ணாண்டோ, சட்டத்தரணி பவானி பொன்சேகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட பேச்சாளர்கள் அனைவரும், தமிழ் மக்களுக்கு போரினால் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை நினைவுகூருவதற்கு சகல உரிமைகளும் இருப்பதாக சுட்டிக்காட்டினர்.

இதன்போது நீதி வேண்டிய அணிதிரட்டலுக்கு நினைவுதிற அணி திரட்டல் இன்றியமையாதது என தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர் எழில்ராஜன் தெரிவித்தார்.

இதனையடுத்து அங்கு உரையாற்றிய தமிழ் சிவில் சமூக அமையத்தின் பேச்சாளரான, யாழ்பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் குமார வடிவேல் குருபரன், ஜெனிவாவோ அல்லது உள்ளக விசாரணையாக இருந்தாலும் அவை அனைத்தும் அரசியல் உள் நோக்கம் கொண்டவை என்று சுட்டிக்காட்டினார்.

# உதவிப்பொருட்களுடன் இன்று நேபாளம் செல்லும் விமானம்

நேபாளத்தில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக இலங்கையில் இருந்து மற்றுமொரு விமானம் அந்த நாட்டுக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குறித்த விமானம் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

நேபாளத்திற்கு உதவிக் கரம் நீட்டும் நோக்கோடு இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லும் நான்காவது விமானம் இதுவாகும்.

இதில் 18 தொன் நிறையுடைய உதவிப் பொருட்கள் ஏற்றிச் செல்லப்படவுள்ளதுடன், இந்தப் பொருட்கள் நேற்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியால் அதிகாரிகளிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை, நேபாளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவிப் பொருட்களுடன் சென்ற முதலாவது குழுவினர் இன்று நாடு திரும்பவுள்ளனர்.

கடந்த மாதம் (ஏப்ரல்) 25ஆம திகதி நேபாளத்தையே உலுக்கிய நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு இன்னும் தணியாத நிலையில், அந்த நாட்டில் நேற்றுக் காலை அடுத்தடுத்து 3 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

# கட்டாரில் தீ விபத்து இலங்கையருக்கு நட்டஈடு

கட்டாரில் இடம்பெற்ற தீ விபத்தில் இலங்கையர்களின் சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்குமாயின், அதற்கான நட்டஈட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

கட்டார் தொழிற்சாலை ஒன்றின் குடியிருப்பு கட்டடத்தில் சில தினங்களுக்கு முன்னர் இந்த தீப்பரவல் இடம்பெறறிருந்தது.

இதில் தங்கி இருந்த 250 இலங்கையர்களுக்கு பாதுகாப்புகள் ஏற்பட்டிருக்கவில்லை எனினும் அவர்களின் உடமைகள் இழக்கப்பட்டிருக்கலாம என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அவ்வாறு உடமைகளை அல்லது சொத்துக்களை இழந்தவர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொடுக்க, அந்த நிறுவனத்தின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

# கடந்த அரசின் ஊழல்கள் சர்வதேசத்திற்கு தெரியும்

## என்கிறார் அமைச்சர் ஜோன்

கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் குறித்து சர்வதேச சமூகத்திற்கு நன்றாகத் தெரியும் என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாகவும் ஜெனிவாவில் முறைப்பாடு செய்ய உள்ளதாகவும் எதிர்க்கட்சியினர் தெரிவித்திருந்தனர்.

முடிந்தால் ஜெனிவாவிற்கு சென்று பாதுகாப்பாக திரும்புமாறு எதிர்க்கட்சியினரிடம் கோருவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு முறைப்பாடு செய்யச் செல்பவர்களுக்கு எதிராக சில வேளைகளில் ஜெனிவாவில் வைத்தே நடவடிக்கை எடுக்கப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடர்

# வில்லியர்ஸ் அசத்தல் சதம் வென்றது பெங்களூர்



(மும்பை)

மும்பை அணிக்கு எதிரான லீக் போட்டியில் டிவிலியர்ஸ் நேற்று அசத்தல் சதம் விளாச பெங்களூர் அணி 39 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


மும்பையில் நேற்று நடந்த போட்டியில் பெங்களூர், மும்பை அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி கப்டன் ஹோலி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார.

பெங்களூர் அணிக்கு கெய்ல் 13 ரன்களில் ஆட்ட மிழந்தார். இருப்பினும் டிவிலியர்ஸ், ஹோலி ஜோடி சிறப்பாக செயற்பட்டது.

ஹோலி அரை சதம் அடித்தார். எதிரணி பந்துவீச்சை துவம்சம் செய்த டிவிலியர்ஸ் சதம் விளாசினார். பெங்களூர் அணி 20 ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 235 ஓட்டங்கள் எடுத்தது. டிவிலியர்ஸ் (133), கோஹ்லி (82) அவுட்டாகாமல் இருந்தனர்.

கடின இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு சிம்மன்ஸ் (68), போலார்ட் (49) அதிரடி காட்டினர். மற்றவர்கள் சொற்ப ரன்களில் வெளியேற, மும்பை அணி 7 விக்கெட்டுக்கு 196 ரன்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக டி வில்லியர்ஸ் தெரிவானார்

# சென்னையின் பந்துவீச்சில் சுருண்டது ராஜஸ்தான்



(சென்னை)

ஜடேஜாவின் சுழலும் மோகிர்த் சர்மாவின் இறுதி நேர விக்கெட் வேட்டையிலும் 12 ஓட்டங்களால் சென்னையிடம் வீழ்ந்தது ராஜஸ்தான் றோயல்ஸ்.

சென்னை சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணித் தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

அதன்படி அவ்வணி சார்பாக சிமித், மக்கலம் களமிறங்கினர். எனினும் சிமித் 6 ஓட்டத்துடன் வெளியேற அடுத்து வந்த ரெய்னாவும் 3 ஓட்டத்துடன் நடையைக கட்டினார்.

பின்னர் வந்த டுபிளசிஸ் மக்கலத்துடன் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்க சென்னை அணியின் ஓட்டம் அதிகரித்தது. எனினும் பிளஸிஸ் 29, மக்கலம் 81 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மொறிஸ் 3, சர்மா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

158 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு ஜடேஜா சுழலில் மாயாஜாலம் காட்டி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் பின்னர் 19 ஆவது ஓவரை வீசிய மோகித் சர்மாவும் அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்த சென்னை அணியின் வெற்றி பிரகாசமானது.

இறுதியில் அவ்வணி 9 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்று 12 ஓட்டங்ளால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் ஜடேஜா 4, மோகித் சர்மா 3, பிறாவோ 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஜடேஜா தெரிவானார்.

# தேர்தலில் மகிந்த போட்டியிட்டால் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா?

## கேட்கிறார் சுனில் ஹந்துன்நெத்தி



(கொழும்பு)

ஒரு தடவை மக்களினால் ஜனாதிபதித் தேர்தலில் புறக்கணிக்கப்பட்டவர் மீண்டும் தேர்தலுக்கு வந்தால் மக்கள் அவரை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கின்றீர்களா? என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களினால் ஒரு முறை புறக்கணிக்கப்பட்ட தலைவர் ஒருவரை அதேமக்கள் மீண்டும் அழைக்க மாட்டார்கள் என்று தான் நான் நினைக்கின்றேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்த வேண்டிய சகல சக்தியையும் வளங்களையும் உச்ச அளவில் ஜனாதிபதியாக இருந்து கொண்டு பயன்படுத்தியே அவரினால் வெற்றியடைய முடியவில்லை. இதுவொன்றும் இல்லாமல் போட்டியிட்டு அவரால் பிரதமராக வர முடியுமா?என்பது ஒரு கேள்விக்குறியாகும் எனவும் சிங்கள பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியொன்றில் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.